
# நித்திலம்

வடக்கு - கிழக்கு மாகாண

தமிழ் மொழித்தின

## விழா மலர்

1998



வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் நடாத்தும்

# தமிழ் மொழித்தினம்

## 1998

## ஆனித் திங்கள் 20ம் நாள்

26999

*பற்பல ஆயிரம் ஆண்டுகள் - இந்தப்*
*பாரினில் இருந்தறம் பூண்டவள்*
*அற்புதம் இன்னமும் கன்னியே - புது*
*அழகுதரும் தமிழ் அன்னையே.*

- நாமக்கல் கவிஞர் -

# தமிழ்த்தாய் வணக்கம்



நீராருங் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத்
திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும்
தரித்த நறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த
திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ
லனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்தபெருந் தமிழணங்கே

பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன்
இருந்தபடி இருப்பது போல்
கன்னடமுங் களிதெலுங்குக்
கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்று பல ஆயிடினும்
ஆரியம் போ லுலகவழக்
கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே.

– மனோன்மணியம் –

வடக்கு – கிழக்கு மாகாணத் தமிழ்மொழித் தினவிழா

# நிறைவு நாள் நிகழ்ச்சிகள்

## 1998 - 06 - 20 சனிக்கிழமை பி. ப. 3.00 மணி

தலைமை

**திரு. க. கந்தசாமி அவர்கள்**

மாகாண கல்விப் பணிப்பாளர்

பிரதம விருந்தினர்

**திரு. சுந்தரம் டிவகலாலா அவர்கள்**

செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு.

கருமத்தைத் தொடர்ந்து செய்யவும்

-விவேகானந்தர்-

# தமிழ்த்தின விழா குழு

*காப்பாளர்*

**திரு. சுந்தரம் டிவகலாலா அவர்கள்**

செயலாளர்
கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சு

*தலைவர்*

**திரு. க. கந்தசாமி அவர்கள்**

மாகாண கல்விப் பணிப்பாளர்

*செயலாளர்*

**திரு. எஸ். மகாலிங்கம் அவர்கள்**

மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்

*பொருளாளர்*

**திரு. ஆர். சுகுணதீபன் அவர்கள்**

பிரதம கணக்காளர்
மாகாண கல்வித் திணைக்களம்

*இணைப்பாளர்*

**திரு. ச. இரமணீகரன்**

மாகாண கல்வித் திணைக்களம்

****************************************
****************************************

# நிகழ்ச்சித் திட்ட ஆலோசகர்கள்

****************************************
****************************************

**திரு. என். சிவானந்தன்**
மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்

**திரு. ரி. பி. டி. ஆரியசேன**
பிரதேச கல்விப் பணிப்பாளர்

**திரு. எஸ். சுப்பிரமணியம்**
கல்விப் பணிப்பாளர்

**திரு. எம். பவளகாந்தன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**திருமதி. எஸ். பவளகாந்தன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. வி. மகேந்திரன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**ஜனாப். எம். கே. எம். ஹனீபா**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. றோச் அருளப்பு**
நிர்வாக உத்தியோகத்தர்

**திரு. கே. துரைரட்ணசிங்கம்**
அதிபர்

# மலர்க் குழு

திரு. எஸ். மகாலிங்கம்
திரு. என். எதிர்மன்னசிங்கம்
திரு. எஸ். நவரட்ணம்
திரு. எஸ். மகேஸ்
திரு. எஸ். இரமணீகரன்
திருமதி. எஸ் பவளகாந்தன்
திருமதி. எம். பற்குணம்
திருமதி. பீ. தண்டாயுதபாணி
திருமதி. என். ஸ்ரீதேவி

## நிலையப் பொறுப்பாளர்கள்

*திரு. எஸ். தண்டாயுதபாணி அதிபர்*
தி/ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

*அருட் திரு சகோதரர் ஏ. சூசைதாசன் அதிபர்*
தி/புனித சூசையப்பர் கல்லூரி

*திரு. எஸ். கீத பொன்கலன் பிரதி அதிபர்*
தி/புனித சவேரியார் ம. வி.

*திருமதி. எஸ். பாலசுப்பிரமணியம்*
தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி

# நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| ★ விருந்தினரை வரவேற்றல் | | |
| ★ மங்கல விளக்கேற்றல் | | |
| ★ தமிழ்த்தாய் வணக்கம் | - | தி/விபுலானந்தா மகா வித்தியாலயம் |
| ★ வரவேற்புரை | - | **திரு. எஸ் மகாலிங்கம் அவர்கள்**<br>மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் |
| ★ தலைமையுரை | - | **திரு. கே. கந்தசாமி அவர்கள்**<br>மாகாண கல்விப் பணிப்பாளர் |
| ★ மலர் அறிமுகவுரை | - | **திரு. எஸ் எதிர்மன்னசிங்கம்**<br>உதவிக் கல்விப் பணிப்பாளர்<br>பண்பாட்டலுவல்கள் அமைச்சு |
| ★ சான்றிதழ் வழங்கல் | - | |
| ★ பிரதம விருந்தினர் உரை | - | **திரு. சுந்தரம்டிவகலாலா அவர்கள்**<br>செயலாளர்<br>கல்வி, பண்பாட்டலுவல்கள்<br>விளையாட்டுத்துறை அமைச்சு |
| ★ தேர்ந்தெடுக்கப்பட்ட சில நிகழ்ச்சிகளின் அரங்கேற்றம் | | |
| ★ நன்றியுரை | | **திரு. ச. இரமணீகரன்**<br>இணைப்பாளர்<br>மாகாணக் கல்வித் திணைக்களம் |
| ★ தமிழ் மொழி வாழ்த்து | | தி/புனித மரியாள் கல்லூரி |

# நிகழ்ச்சிப் போட்டி இணைப்பாளர்கள்

| | | |
|---|---|---|
| **வாசிப்பு பிரிவு** | 1, 2. | - **ஜனாப். எம். எல். ஏ. ஜவாத்.**<br>உதவிக் கல்விப் பணிப்பாளர். |
| **பேச்சு பிரிவு** | 1, 2, 3. | - **திரு. மு. சிவபாலபிள்ளை.**<br>செயற்றிட்ட அலுவலர். |
| **பேச்சு பிரிவு** | 4, 5. | - **திரு. கே. அரியநாயகம்.**<br>திட்டமிடல் அலுவலர். |
| **பாஓதல் பிரிவு** | 1, 2, 3. | - **திரு. உ. பாலச்சந்திர ஐயர்.**<br>பிரதி அதிபர். |
| **பாஓதல் பிரிவு** | 4, 5. | - **திருமதி. வனஜா ஜெகதீஸ்வரன்.**<br>சேவைக்கால ஆசிரிய ஆலோசகர். |
| **தமிழ் அறிவு வினாவிடைப் போட்டி** | | - **திரு. ஏ. தில்லையம்பலம்.**<br>அதிபர். |
| **விவாதம்** | | - **திரு. பொ. அன்புரட்ணம்.**<br>பிரதி அதிபர். |
| **நாட்டார் பாடல்** | | - **திரு. எஸ். மோகனசுந்தரம்.**<br>உதவிக் கல்விப் பணிப்பாளர். |
| **இசை** | | - **திரு. என். நற்குணம்.**<br>செயற்றிட்ட அலுவலர். |
| **நடனம்** | | - **திருமதி. எஸ். கணபதிமுத்து.**<br>சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்.<br>- **செல்வி. உதயா சிவஞானம்.**<br>ஆசிரியர் ஆலோசகர். |
| **நாட்டிய நாடகம்** | | - **திரு. எஸ். பாலசிங்கம்.**<br>உதவிக் கல்விப் பணிப்பாளர். |
| **நாட்டுக்கூத்து** | | - **திரு. கே. திலகரத்தினம்.**<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர். |
| **இலக்கிய நாடகம்** | | - **திரு. எஸ். அமிர்தகுலசிங்கம்.**<br>உதவிக் கல்விப் பணிப்பாளர். |
| **வில்லுப் பாட்டு** | | - **திருமதி. எம் பத்குணம்.**<br>செயற்றிட்ட அலுவலர். |
| **சிங்களமாணவர்கள் நிகழ்ச்சி** | | - **திரு. எம். பீ. எம். முஸ்தபா**<br>பிரதி அதிபர். |
| **முஸ்லிம் தள நிகழ்ச்சி** ழச்சி | | - **திரு. ஜெ. எம். யூசுப்.**<br>அதிபர். |

## போட்டி உதவியாளர்கள்

| | |
|---|---|
| **திரு. வி. தங்கவேல்** | அதிபர் |
| **திரு. எஸ். நவரட்னம்** | அதிபர் |
| **திரு. ஓ. குலேந்திரன்** | உதவிக் கல்விப் பணிப்பாளர் |
| **திரு. எஸ். சதானந்தன்** | உதவித் திட்டமிடல் அலுவலர் |
| **திரு. எஸ். மகேஸ்** | ஆசிரிய ஆலோசகர் |
| **திரு. எஸ். பாலசிங்கம்** | உதவிக் கல்விப் பணிப்பாளர் |
| **செல்வி. ரி. செல்வமனோகரி** | எழுது வினைஞர் |

வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர்

# கலாநிதி. காமினி பொன்சேகா

அவர்களின்

## ஆசியுரை

*'தேமதுரத் தமிழோசை உலக மெலாம்*
*பரவும் வகை செய்தல் வேண்டும்.'*

இந்திய சுதந்திரக் கவி பாரதியாரின் பாடலின் அடிகள் தமிழ்மொழியின் இனிமையையும் பெருமையையும் புலப்படுத்துகின்றது. இனிமையும், பழமையும், நாகரிகமும் வாய்ந்த மொழிகளுள் தமிழ் மொழி முதன்மையானது என்பதை ஆசியாவில் மட்டுமின்றி ஐரோப்பிய நாடுகளிலும் கூட இடம் பெற்றுவரும் தமிழ் மொழி ஆய்வுகள் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றன.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் பருத்தித்துறையில் இருந்து, அம்பாறை வரையுள்ள மிக நீண்ட நிலப்பரப்பில் தமிழ் பேசும் மக்கள் பெருமளவில் வாழ்கின்றனர். தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள், தமிழைப் பிழையின்றிப் பேசவும், வாசிக்கவும், எழுதவும், அதன் சுவையை நயந்து கொள்ளவும் வேண்டும். அப்பொழுது தான் தமிழ் மொழி செழுமையுறும். அத்தகைய குறிக்கோள்களை அடையும் நோக்கில் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் இவ்வருடமும் வழமைபோல் தமிழ் மொழித் திறன் போட்டிகளை மாகாண ரீதியில் நடாத்துவதையிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் இவ் விழா சிறப்புற அமைய என் ஆசிகளையும் கூறுகின்றேன்.

ஆளுநர் அலுவலகம்,
வடக்கு கிழக்கு மாகாணம்
*05 - 06 - 1998*

**கலாநிதி. காமினி பொன்சேகா**
ஆளுநர்.

# கல்வி, உயர் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர்

## திரு. இ யோகநாதன்

### அவர்களின்

# ஆசிச் செய்தி

மாணவர்களின் மொழி அறிவையும் திறமையையும் மேம்படுத்தும் நோக்குடன் வடக்கு கிழக்கு மாகாண கல்வி, கலாச்சார, விளையாட்டுத்துறை அமைச்சினால் ஒழுங்கு செய்யப்படுகின்ற தமிழ் மொழித்தின விழாவையொட்டி வெளியிடப்படுகின்ற மலருக்கு எனது ஆசிச் செய்தியை மனமுவந்தளிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த மொழி" என்றும், உலகிலுள்ள மொழிகளுள் பழமையும் செம்மையும் வாய்ந்ததொன்று என்றும் கருதப்படும் எமது மொழி இந்நாட்டில் ஆரம்பக் கல்வி தொடக்கம் பல்கலைக் கழகம் வரை போதனா மொழியாக இருந்து வருகின்றது. இக் காரணத்தினால் தமிழ் மொழி பல் துறைகளிலும் செழித்தோங்கக் கூடிய வாய்ப்பு இருந்த போதிலும் தற்காலப் போக்கை நோக்குகின்ற போது பொது சாதாரண, உயர்தர மட்டத்திலோ, பல்கலைக் கழக மட்டத்திலோ ஆராய்ச்சித் துறையிலோ கடந்த காலச் சந்ததியினர் மொழி அறிவைப் பெறுவதற்கும் அதனுடைய குணாதிசயங் களைச் சுவைப்பதற்கும் காட்டுகின்ற ஆர்வம் அருகியே காணப்படுகின்றது. கைத்தொழில் மற்றும் தகவல் பரிவர்த்தனை வளர்ச்சி அதி மின்வேகத்தில் இடம் பெறுகின்ற இந் நாட்களில் மொழியைக் கற்பதனால் தொழிலைப் பெறுகின்ற வாய்ப்பு இல்லாமையே இதற்கு முழுக் காரணம் என்று கூறலாம்.

இப் பின்னணியில் பார்க்கின்ற பொழுது தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர் களிடையே மொழி ஆர்வத்தையும் அதன் சிறப்பம்சங்களையும் அறிவதற்கு இத்தகைய மொழித்தின விழா உதவுமென்பது திண்ணம், அத்தோடு இலங்கையில் தமிழ் கூறும் நல்லுலகமாகிய வடக்கு, கிழக்கு, வன்னி போன்ற பலதரப்பட்ட பின்னணியில் இருந்து போட்டிகளில் கலந்து கொள்ள வருகின்ற மாணவர்கள் தங்களின் தனித்துவமான கலாச்சார பாரம்பரியங்களையும் மற்றவர்களுடைய வேறுபட்ட நடையுடை பாவனைக்ளையும் அறிந்து, புரிந்துணர்வுடன் அந்நியோன்னிய மாக வாழ்வதற்கு வழி செய்யுமென நம்புகிறேன்.

**இ. யோகநாதன்**
மேலதிகச் செயலாளர்.

## வடக்கு – கிழக்கு மாகாணத் தலைமைச் செயலாளர்,

# திரு. ஜீ. கிருஷ்ணமூர்த்தி

### அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

எமது மாகாண சபையின் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் செயற்படும் மாகாணக் கல்வித் திணைக்களம் இவ்வாண்டும் மிகவும் சிரத்தையோடு தமிழ்த்தினப் போட்டிகளை நடாத்தி, தமிழ்த்தின விழாவையும் சிறப்புறக் கொண்டாடுவது வரவேற்கத்தக்கது.

மாணவர்களின் இலக்கிய ஆற்றல்களையும், மொழித் திறனையும் விருத்தி செய்வதற்கு ஆண்டுதோறும் மாணவர்களிடையே நடாத்தப்படும் இத்தமிழ்த்தினப் போட்டியின் நோக்கை அதிபர்களும், ஆசிரியர்களும் தெரிந்து கொண்டு மாணவர்களை அதன் இலக்கை நோக்கி வழிநடாத்திச் செல்ல வேண்டும் என்றும், மாணவர்களும் விழிப்புப் பெற்றுப் பயன் பெறவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

மிகவும் நெருக்கடியான இக்கால கட்டத்திலும், சகல மாவட்டங்களிலிருந்தும் மாணவர்கள் மிக ஆர்வமாக வருகை தந்து போட்டிகளில் பங்கெடுத்து சிறப்பித்ததற்கும், அவர்களுக்குப் பின்னணியிலிருந்து உதவிய அதிபர், ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

இத்தமிழ்த்தின விழாவின் சிறப்பு மலர் மணம் கமழ்ந்து இத்தமிழ்த்தின விழாவின் புகழ் பரப்பவும், அதன் மூலம் மாணவர்குழாம் தழைத்தோங்கவும் எனது நல்லாசிகள்.

**ஜீ. கிருஷ்ணமூர்த்தி**
தலைமைச் செயலாளர்,
வடகிழக்கு மாகாண சபை.

வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள்

விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர்,

# திரு. சுந்தரம் டிவகலாலா அவர்களின்

# ஆசியுரை

தமிழ் மொழியைத் தீந்தமிழ் என்றும், செந்தமிழ் என்றும், பைந்தமிழ் என்றும் புகழ்பாடிக் கவிபாடித் தமிழ் வளர்த்த உத்தமர்கள் உண்மையிலே பூசிக்கப்பட வேண்டியவர்கள். இம் மொழி தனது பரிணாம வளர்ச்சியில் பல இடர்களைக் கண்டு பொலிவுள்ளதாக, திறனுள்ளதாக வளர்ந்து நின்றது. ஆனால் இன்று இம் மொழி கலாச்சார மாற்றங்களினால் தவிர்க்க முடியாதபடி தன் தனித்துவத்தை இழந்து வருகின்றது, என்பது வருத்தத்துடன் கூறிகொள்ள வேண்டிய நிதர்சன மாகும். ஆகவே, தமிழ் மொழியை வென்றெடுக்க அதன் விருத்திக்கு மேலும் வழி காட்ட இத் தமிழ்த்தினம் உதவும்; உதவ வேண்டும் என்பதே என் அவாவாகும். நாளைய சந்ததி தமிழின் அருமை பெருமைகளைக் கண்டு தெளிவதற்கு இத் தமிழ்த்தினம் ஓர் களமாக அமைய வேண்டும்.

கவிக்குக் கம்பன் என்றும், நாடகத்திற்கு இளங்கோ என்றும், கட்டுரைக்கு நாவலர் என்றும் புகழ்பாடி அவர்கள் சமைத்துத் தந்த இலக்கியங்களின் நிழலிலே இளைப்பாறிக் குளிர்காயும் நாம், எங்கள் மத்தியிலே இருக்கின்ற கம்பர்களை, இளங்கோக்களை, நாவலர்களை தமிழ் சமூகத்திற்கு அறிமுகம் செய்யவேண்டும். அதற்கு இத் தமிழ்த்தினம் உதவவேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் யாழ்மாவட்ட மாணவர்கள் மிகக்கஷ்டத்தின் மத்தியில் கலந்து கொள்கின்றனர். அதே போன்று ஏனைய மாவட்ட மாணவர்களும் சேர்ந்து தமிழ்த்தினத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தது உண்மையிலே பாராட்டப்பட வேண்டிய ஒன்று. மொழி மீது அவர்கள் கொண்ட பற்றை இது பறைசாற்றுகிறது. அவர்களுக்கு வட கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் என்ற வகையில் எனது பாராட்டைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ்த்தின விழா சிறப்பு மலரின் இதழ் ஒவ்வொன்றும் மணம் வீசிப் பிரகாசிக்கவும், அதன் தண்ணொளியில் தமிழ் சமூகம் விளக்கம் பெறவும் வாழ்த்துகின்றேன்.

**திரு. சுந்தரம் டிவகலாலா**

செயலாளர்,

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு

வடக்கு கிழக்கு மாகாணம்

## வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்

# திரு. க. கந்தசாமி அவர்களின்

# ஆசிச் செய்தி

ஆண்டாண்டு நடைபெறும் நமது தமிழ்த்தின விழா இவ்வாண்டு யூன் 19ம், 20ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

நமது சிறார்களிடையே தாய்மொழித் திறனையும், நமது நாட்டுக் கலை, கலாச்சார ஆர்வத்தையும் ஊட்ட இந்நிகழ்வு பயன் படுகிறது.

பாடசாலை, கோட்ட, மாவட்ட/வலய, தேசிய மட்டங்களில் இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில் பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் பங்குகொண்டு பயன் அடைகிறார்கள். மதிப்பும், ஊக்கமும் பெறுகிறார்கள்.

சிலவேளைகளில் விபத்து ஏற்படுவது போன்று எதிர்பாராத முடிவுகளும் நமக்கு வந்துவிடுகின்றன. இது நமக்கு வேதனையாகும்.

இலைமறை காயென மறைந்து கிடக்கும் கலைத்திறன் மிக்க மாணவர்கள் இளம் கலைஞர்களாக மேடையேறுவதற்கு இது நல்லதோர் சந்தர்ப்பமாக அமைகிறது.

நல்லமொழி ஆற்றல் உள்ளவர்களாக நம் மாணவர்கள் திகழவும், முட்டுப்பாடின்றித், தட்டுப்பாடின்றி அவர்கள் மொழியை சரளமாகப் பேசவும், எழுதவும் இத்தமிழ் மொழிப் போட்டிகள் உதவ வேண்டும்.

சாதகமற்ற இன்றைய சூழ்நிலையிலும் தளராது சகல மாவட்டங்களிலும் இருந்து வருகைதந்து நிகழ்ச்சிகளில் பங்கெடுத்து சிறப்பித்த அனைத்து மாணவர்களுக்கும் எனது நன்றிகள்.

மாணவர்களின் தரமான ஆக்கங்கள் பலவற்றுடனும் மலரும் இவ்விழா மலர் மேலும் மாணவர்களை ஊக்குவிக்கும் என நம்புகின்றேன். இம்மலருக்கு நல்லாசி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**திரு. க. கந்தசாமி**
வடக்கு கிழக்கு மாகாண கல்வித்திணைக்கள
மாகாண கல்விப்பணிப்பாளர்.

# மலர்க்குழு தொகுப்பாசிரியர்

# திரு. எஸ் எதிர்மன்னசிங்கம்

## அவர்களிடமிருந்து........

மாணவர்களும், ஆசிரியர்களும், அதிபர்களும் மிகவும் நெருக்கமான ஒரு கலைக்கூடத்தில் இன்று கல்வி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுவருவது நாமறிந்ததொன்றே. வடக்கு கிழக்கில் மாத்திரமன்றி நாட்டின் சகல பகுதிகளிலும் இன்று பிரச்சனைகள் மலிந்து காணப்படுகின்றன. அவ்வாறான ஒரு சூழலில் தமிழ் மொழித்திறனை விருத்தி செய்வதற்கு கல்வியாளர்கள் முயற்சிகள் மேற்கொண்டுவருவது மிகவும் வரவேற்கத்தக்கது.

கலை இலக்கியத் துறையிலும், தமிழ்மொழி அபிவிருத்தியிலும் மாணவர்களை உற்சாகப்படுத்தி போட்டிகளின் மூலம் தமிழ்மொழி வளர்ச்சிக்கு சகல மட்டங்களிலும் ஊக்கம் அளிக்கப்பட்டு வருகின்றது. மாணவர்களிடையே பாடசாலை, கோட்டம், மாவட்டம், மாகாணம் என்றும் தேசிய ரீதியிலான போட்டிகள் வருடந்தோறும் நடாத்தப்படுகின்றன. இவற்றின் மூலம் மாணவர்களின் மொழித் திறன் வளர்க்கப்படுவதோடு, ஆக்கத்திறன், கலை ஆர்வம், சமூக மேம்பாடு, பாரம்பரிய விழிப்புணர்வு ஆகியவை நன்னிலை பெறுகின்றன.

மாகாண ரீதியில் தமிழ்மொழித்தின விழாவோடு வருடந்தோறும் சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்பட்டு வருவது சிறந்தவொரு ஆவணமாக இடம்பெற்று வருகின்றது. இம்முறையும் விழாச்சிறப்பு மலருக்கு ஆசிச்செய்திகளும் ஆக்கங்களும் உவந்தளித்த சகலருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, என்னுடன் சேர்ந்து சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கி மலர் சிறப்புற அமைவதற்கு துணையாய் நின்ற மலர்க்குழுவினருக்கும், இம் மலரைச் சிறந்த முறையில் அச்சிட்டு வழங்கிய ஸ்ரீ கணேச அச்சகத்தாருக்கும் நன்றி கூறி நிறைவு செய்கின்றேன்.

*'முகத்திற் கண்கொண்டு காண்கின்றமூடர்காள்*
*அகத்திற் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்'*

**எஸ். எதிர்மன்னசிங்கம்,**
தொகுப்பாசிரியர்,
மலர்க்குழு.

01

# புதிய கல்விச் சீர்திருத்தங்கள்

# பாட ஏற்பாட்டு மாற்றங்கள்

பாடசாலைப் பாட ஏற்பாடு என்பது பாடசாலைப் பாடங்களின் உள்ளடக்கத்தை அல்லது பாடப் பொருளை மட்டுமன்றி பாடங்களைக் கற்பிக்கப் பயன்படுத்தப்படும் முறையியல் மற்றும் கல்வி தொடர்பான சகல பாடசாலைச் செயற்பாடுகளையும் கருதும். சுதந்திரத்துக்குப் பிற்பட்ட இலங்கையின் கல்வி வரலாற்றில் எப்போதுமே கண்டனத்துக்குள்ளான ஒரு அம்சம் பாட ஏற்பாடாகும். பாடப் பொருளும் கற்பித்தல் முறைகளும் நாட்டில் ஏற்பட்டு வரும் சமூக பொருளாதார மாற்றங்களுக்கு ஒவ்வாதன; பொருத்தமற்றன; சமூக, பொருளாதார தேவைகளுடன் தொடர்பற்றவை; பயனற்ற ஏட்டுக் கல்வியையும் மனனம் செய்வதையும் ஊக்குவிப்பன; பரீட்சைகளையும் சான்றிதழ்களையும் வழங்குவதையுமே மையநோக்கமாகக் கொண்டவை; மனித சாதன வளர்ச்சிக்குப் பயனற்றன என்று பல குற்றச் சாட்டுகளுக்குள்ளாயின. இதனால் சுதந்திரத்துக்குப் பிற்பட்ட கல்விச் சீர்திருத்த முயற்சிகள் பாட ஏற்பாட்டிலும் பல சீர்திருத்தங்களை அறிமுகம் செய்தன; என்றாலும் பாடசாலைப் பாட ஏற்பாடு தொடர்பான கண்டனங்களுக்குக் குறைவில்லை. இப்பின்புலத்தில், தேசிய கல்வி ஆணைக்குழு பாடசாலைக் கல்வியின் சகல மட்டங்களிலும் பாட ஏற்பாட்டைத் திருத்தியமைக்கும் முயற்சியில் பல ஆலோசனைகளையுந் தெரிவித்துள்ளது.

ஆரம்பக் கல்விப்பாட ஏற்பாடு வெறும் ஏட்டுக் கல்வியாக அமையாது விளையாட்டு, செயற்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கி ஐந்து முக்கிய அடிப்படைத் தகைமைகளையும் பிள்ளைகளிடம் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டமையும். தொடர்பாடல் திறன், சமூக, பௌதீக சுற்றாடலைப் புரிந்து கொள்ளல், சமய, ஒழுக்கவியல், விழுமியங்கள், ஓய்வு நேரத்தைப் பயனுள்ள முறையில் பயன்படுத்தல், 'கற்பதற்குக் கற்றல்' ஆகிய ஐந்து அம்சங்களுடன் தொடர்புடையதாக இவ்வடிப்படைத் தகைமைகள் அமையும்.

ஆரம்பக்கல்விப் பாடஏற்பாடு ஒன்றிணைக்கப்பட்டதாய் இத்தகைமைகளை வளர்க்கும் நோக்குடன் விளையாட்டு மற்றும் செயற்பாடு (Activity) என்பவற்றைக் கற்பித்தல் முறைகளாகக் கொண்டமையும். பிள்ளைகள் தமக்குள் கலந்துரையாடவும் சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிடவும் புதியனவற்றைக் கண்டறியவும் தமது ஆக்கத்திறனையும் தனித்துவத்தையும் வளர்த்துக் கொள்ளவும் வாய்ப்பளிக்கப்படும். மாணவர்களுடைய தேவைகளுக்கேற்ப கற்றல் நிகழ்ச்சிகளையும் செயற்பாடுகளையும் ஆசிரியர் ஒழுங்கு செய்வார். இவற்றினூடாகப் பிள்ளைகளின் சமூக திறன்களை வளர்க்கவும் பொறுப்புணர்வை விருத்தி செய்யவும் பிறருடைய உரிமைகளில் அக்கறை செலுத்தவும் முயற்சிகள் செய்யப்படும்.

ஆரம்பக் கல்விப் பாடஏற்பாட்டில் ஆங்கில மொழியும் ஆசிரியரால் பயன்படுத்தப்படும். ஆசிரியர்கள் எளிமையான ஆங்கிலத்தைப் பயன்படுத்தும் வகையில் அவர்களுக்குப் பயிற்சி வழங்கப்படும்; அதற்கான வழிகாட்டிகளும் சொற்பட்டியலும் தயாரிக்கப்படும். இன்றைய நவீன உலகில் ஆங்கில மொழியின் முக்கியத்துவம் கருதி ஆரம்ப வகுப்புகளில் அம்மொழியை ஆரம்ப நிலை ஆசிரியர்கள் பயன்படுத்தும் வகையில், இளைப்பாறிய அரசாங்க, தனியார்துறை ஊழியர்களின் உதவியும் நாடப்படும் மூன்றாம் தரத்திலிருந்து ஆங்கிலமொழி முறையாகக் கற்பிக்கப்படும்.

கனிஷ்ட இடைநிலை மட்டத்தில் (தரங்கள் 6 - 8) ஆரம்ப நிலையில் கற்ற அடிப்படைத் தகைமைகள் மேலும் உறுதி செய்யப்படும்; அத்துடன் முறையான பாடங்களும் கற்பிக்கப் படும். அடுத்த சிரேஷ்ட இடைநிலையில் கல்வி பயிலத் தேவையான அத்திவாரம் இந்நிலை யில் வழங்கப்படும். தனித்தனியான பாடங்கள் அறிமுகம் செய்யப்படும்; ஆயினும் செயற் றிட்டங்கள் (Projects) மூலம் ஒன்றிணைப்புப் பணியும் இடம் பெறும்.

இக்கனிஷ்ட இடைநிலையில் அடிப்படைத்தகைமைகள் தொடர்ந்து வலியுறுத்தப்படும். எட்டாம் தரத்தின் இறுதில் தொடர்ந்து மாணவர்கள் கல்வியை இடைநிறுத்தக் கூடும் என்பதால் அவர்கள் வெளிஉலகில் வாழ்க்கையைத் தொடர்வதற்குத் தேவையான அறிவுக் கும் திறன்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும். இவை உடல்நலம், சுற்றாடல் பாது காப்பு, வாழ்க்கைத்திறன்கள், ஒழுக்க விழுமியங்கள், குடிசார் பொறுப்புணர்வு தொடர்பானவை யாக அமையும். இந்நிலையில் சிங்கள மாணவர்கள் தமிழ் மொழியையும் தமிழ் மாணவர்கள் சிங்கள மொழியையும் தொடர்பு மொழியாகக் கற்க ஊக்குவிக்கப்படுவர்.

6 - 8 வகுப்புகளில் வாழ்க்கைத் திறன்கள் பாட ஏற்பாட்டின் ஒரு முக்கிய அம்சமாக விளங்கும். இவ்வாழ்க்கைத் திறன்கள் உணவு, உடை, உறைவிடம், உடல் நலம், தகவல், தொடர்பாடல் என்பவை பற்றியதாக அமையும். வாழ்க்கைத் திறன்களையும் கற்கப் பாடசா லைகளில் செயற்பாட்டு அறைகளும் விவசாய நிலத்துண்டுகளும் ஒதுக்கப்படும். மாணவர்கள் செயல் முறைத் திறன்களை வளர்ப்பதற்கான கருவிகள் பாடசாலைகளுக்கு வழங்கப்படும். இக்கருவிகள் வீட்டுப்பணிகள், அலுவலகப் பணிகள், தொடர்பாடல், தகவல் சேகரிப்பு, மின்சார வேலை, சுகாதாரப் பணிகள், உணவு பதனிடல், அரங்கக்கலைகள், விவசாயம் என்பனவற்றுடன் சம்பந்தப்பட்டவையாக இருக்கும். அத்துடன் பலகை, பிளாஸ்டிக், உலோ கங்கள், புடவை, களிமண் போன்றவற்றைப் பயன்படுத்தத் தேவையான சாதனங்களும் கருவிகளும் வழங்கப்படும். பாடசாலைகளை அமைந்துள்ள பிராந்தியங்களுக் கேற்ற தொழில் திறன்களுக்கு முக்கியத்துவமளிக்கப்படும்.

பிள்ளைகள் இத்துறைகள் சார்ந்த திறன்களையும் பாடசாலைகளிலேயே வளர்த்துக் கொண்டால் பிற்காலத்தில் நாளாந்த வாழ்வில் எதிர்நோக்கும் சவால்களையும் பிறர் உதவி யின்றி சமாளிக்க முடியும்; இத்திறன்களில் பரீட்சயம் இளமையில் ஏற்படும் போது, பின்னர் அவற்றை நன்கு வளர்த்துக் கொள்ளவும் சாத்தியம் உண்டு; தொடர்பாடல் திறன்கள் மூலம் தனது எதிர்காலத் தொழில் பற்றிய புதிய தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடியும்; எட்டாம் தரத்தில் பயிலும் போது, வளர்ந்தோர் வாழ்க்கையில் எதிர்நோக்கும் நாளாந்த செயற்பாடுகளுக்குத் தேவையான செயன்முறைத் திறன்கள் கற்பிக்கப்படும். மொத்தத்தில் பாடசாலைக் கல்வியின் நூற்கல்விச் சார்பு என்றும் குறைபாடான அம்சம் நீக்கப்பட இவ் வாழ்க்கைத்திறன் பற்றிய ஆலோசனை பயனுடையதாக அமையலாம். மேலும் பாடசாலைக் கல்வி வெளிஉலக நடைமுறை வாழ்க்கையுடனும் யதார்த்தமான வேலை உலகுடனும் தொடர்புபடுத்தப்படவும் கல்வி, வாழ்க்கைப் பயனுடையதாய் அமையவும் இவ்வாலோசனை உதவலாம்.

முறைசார்ந்த பாடசாலை அமைப்பிற்கு அப்பால், நடைமுறையில் பயன்தரக் கூடிய திறன்கள், தகவல்கள், அறிவு என்பவற்றைப் பெற்றுக்கொள்ளப் பல மாற்று ஏற்பாடுகளும் செய்யப்படும் என்றொரு ஆலோசனையும் கூறப்பட்டுள்ளது. இம்மாற்று ஏற்பாடுகளாவன:

01. தற்போது இயங்கிவரும் தொழில் சார், தொழில் நுட்ப நிறுவனங்கள் மேலும் விரிவுபடுத்தப்படும்.

02. க. பொ. த சா/நி, உ/நி கற்றுப் பாடசாலைகளிலிருந்து வெளியேறுவோருக்குத் தேவையான புதிய நிறுவனங்கள் ஏற்படுத்தப்படும்.

இவை வழமையான பட்டப்படிப்புப் பயிற்சி நெறிகளைவிட மாணவர்களுக்குக் கவர்ச்சிகரமாக அமையும்.

முறைசார்ந்த பாடசாலைக்கல்வியை இடையில் நிறுத்தும் பிள்ளைகளுக்கும் மற்றும் வளர்ந்தோருக்கும் உதவும் வகையில் சமூகத்தின் கல்வித் தேவைகளை நிறைவு செய்ய, முறைசாராக் கல்வி ஏற்பாடுகள் வலுப்படுத்தப்படல் வேண்டும் என்ற ஆலோசனையும் முக்கியமானது. எமது நாட்டின் எழுத்தறிவு வீதம், மக்களின் கல்வி மட்டம் என்பன வளர்முகநாடுகளையும் பொறுத்தவரையில் மிகவும் முன்னேற்றகரமானது எனக் கூறப்படுகின்றது. ஆயினும் உண்மையில் எமது நாட்டு மக்களில் 11.8 வீதமானவர்கள் எழுத்தறிவற்றவர்கள்; 41 வீதமானவர்கள் ஆரம்பக்கல்வி கற்றவர்கள்; க. பொ. த. சா/நி பயின்றவர்கள் 11.9 வீதமானவர்கள்; க. பொ. த. உ/நி பயின்றவர்கள் 2.3 வீதமானவர்கள்; பட்டதாரிகள் 0.6 வீதமானவர்கள் மட்டுமே! (1986 / 87). இப்புள்ளி விபரம் முறைசார்ந்த பாடசாலை முறையினால் மக்களின் கல்விமட்டத்தை ஒரு அளவுக்கு மேல் அதிகரிக்க முடியாது என்பதையும் கல்வி மேம்பாட்டுக்கு எமது நாடு மாற்று வழிகளைத் தேட வேண்டும் என்பதையும் காட்டுகின்றது. முறைசாரக் கல்வி ஏற்பாடுகள் அத்ததைகய ஒரு மாற்றுவழிகாகும். பாடசாலைக்கல்வியை விட முறைசாராக் கல்வி ஏற்பாடுகள் பயனுடைய, செய்கை முறைப் பயிற்சி, வேலைத்திறன்கள், தொழில்சார் திறன்கள் என்பவற்றை வழங்கப் பொருத்தமானவை எனக் கருதப்படுகின்றது. இந்நிலையில் இவ்வேற்பாடுகள் புதிய ஆலோசனைகளில் முக்கிய இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர்

**சோ. சந்திரசேகரன்**

# தமிழன்னையிடம் ஒன்று கேட்பேன்.

தரைகளெல்லாம் மேகத்திடம்
மழையைத்தான் கேட்கும்
நரைகளெல்லாம் ஒன்று சேர்ந்து
இளமையைத்தான் கேட்கும்
பசுக்களிடம் கன்றெல்லாம்
பாலைத்தான் கேட்கும்
கொசுக்களெல்லாம் மனிதனிடம்
உதிரமதைக் கேட்கும்
மாணவரும் கல்வியைத்தான்
மாநிலத்தில் கேட்பர் - நான்
ஆனவரை அன்னையிடம் மறு ஜென்மத்தில்
தமிழனாக ஈன்றிடாதே எனக்கேட்பேன்.

வண்ணத்தமிழ் அறிஞர்களும்
வான் புகழும் புலவர்களும்
கண்ணதாசன் முதல் காளிதாசனும்
கலை வாணரும், கலையுலகமும்
பாரதியும், பாவேந்தரும்
பாடி வைத்துப் போனாரே
சாரதியே இல்லாத இவன்
தரங்கெட்ட தமிழனென்று.

அன்னையே அதற்காகத்தானா
அனலாய்க் கொதிக்கும் உலகினில்
என்னைத் தமிழனாய்ப் படைத்தாய்
இருக்க முடிய வில்லையம்மா
கூட இருந்து குழி பறிக்கும்
கூட்டங்களின் மத்தியிலே
நாட விட்டு நகைக்கின்றாயே
நலம் தானா தாயே?

எட்டுத் திசையிலும் தமிழ்க்குலம்
கெட்டுத் தலை முழுகி அலையுது
பட்டுத் துணியினில் அன்னையே
பட்ட கறையதைப் போலவே
தொட்ட துயர் எமைச் சுற்றியே
தொடர்ந்து பிடித்து ஆட்டுதே.

கொடுமைப் போரினில் சிக்கியே
கொன்று குவியுது தமிழினம்
அடிமை அடிமை வாழ்வென
அழுது மனங்கள் புலம்புது
கொடிது கொடிது மனிதனாய்
மண்ணில் பிறந்தது மாகொடிது - அதிலும்
கொடிது தமிழனாய்ப் பிறப்பது
தாயே நீயே முடிவு சொல்.

**தவநேசன் பிரதாபன்**
யா/ஏழாலை ம. வி.

# தமிழ் ஆளுமை

# 'மொழி ஆளுகையின் தன்மையே ஒருவனின் ஆளுமை விருத்தியைத் தீர்மானிக்கிறது'

ஒருவனை ஆளாக்குகின்ற பல காரணிகளுள் மிகவும் செல்வாக்குள்ள காரணியாக மொழியே அமைகிறது. மனிதனுக்குக் கிடைத்த மிக அரிய சொத்து அவன் பேசும் மொழி ஆகும். அவன் சிந்தனை, செயல், உணர்ச்சி, போக்கு எல்லாவற்றிற்குமே அவனது மொழிதான் திறவுகோல். ஆகவே ஒருவனின் ஆளுமைப் பண்புகளானது அவன் ஆளுகின்ற மொழிவிருத்தியின் அடிப்படையிலேயே தங்கியிருக்கிறது எனலாம்.

ஆளுமை (Personality) என்றால் என்ன என்பது பற்றிப் பலரும் பலவிதமான வரைவிலக்கணங்களையும், விளக்கங்களையும் அளித்துள்ளார்கள். ஒவ்வொரு வரைவிலக்கணங்களும், விளக்கங்களும் ஆளுமைப்பண்பு விருத்திக்கு மொழியடைவின் தேவையானது ஏதோ ஒரு வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர்த்திக்கொண்டே இருப்பதைக் காணலாம். "**ஆளுமையானது ஒருவனின் அனைத்து இயல்புகளினதும் நடத்தைகளினதும் மொத்த விளைவாகும்.**" அதாவது, ஒருவனுடைய (1) உளச்சார்பு (2) அறிவு (3) மனப்பாங்கு (4) கவர்ச்சி (5) சூழலுடனிணைந்த மனவெழுச்சி என்பவற்றில் அது ஏற்படுத்தும் விளைவைக் குறிப்பதாகும். இவையனைத்தையும் வெளிப்படுத்தப்படும் ஊடகமாக அமையும் மொழி அகம் சார்ந்தவையாகவும், சமூகம் சார்ந்தவையாகவும் அமையும்.

(1) அகம் சார்ந்தது — சுயஎண்ணக்கரு, நம்பிக்கை, ஆற்றல் போன்றவை.

(2) சமூகம் சார்ந்தது — ஏனையவருடன் ஏற்படும் தொடர்பினால் வருவது.

சமூக இயக்கத்தின் சாதனமான மொழி இன்றேல், மனிதன் முழுமைபெறல் இயலாது. பிறப்பிலிருந்து இறப்பு வரையும் தம் கருமங்களைச் செய்ய இயல்பாகப் பயன்படுகின்ற மொழியைத்தானே நாம் "தாய்மொழி" என்கிறோம்?

மாணவன் என்ற நிலையில் ஒருவன் தன்னுடைய கருத்து, அனுபவம், உணர்ச்சி ஆகியவற்றைத் தெளிவாகவும், சுவையாகவும், ஆற்றலுடனும் வெளியிடுவதற்கும் அவ்வாறே அவற்றைப் பிறரிடமிருந்து தெளிவாக விளங்கிக் கொள்வதற்கும் பயிற்சி அளிப்பதே மொழி அறிவின் முக்கிய நோக்கமாகிறது.

இந்தப் பின்னணியிலேதான் ஒரு தமிழ் பயிற்றும் ஆசான் மாணவரின் மொழி விருத்தியைப் பெருக்குவதற்குத் தூண்டியாக அமைதல் அவசியமாகிறது. "மொழி மனதைக் காட்டும் ஒரு கண்ணாடி" என்பர் (R. A. வில்சன்).

மனிதனுக்கே உரிமையான சொத்து அவனது மொழி. மற்றவையெல்லாம் வாயில்லாப் பிராணிகளாகக் கருதப்பட, மொழியை லாவகமாகப் பேசத் தெரிந்தவனையே உலகம் வாயுள்ள பிராணி என மதிக்கிறது.

தனக்கு தேவையானதை தன் கருத்தை தனக்கேற்படும் உணர்வை எடுத்துச் சொல்லத்-தெளிவாக வெளிக்காட்ட எவனுக்கு முடியாமல் இருக்கிறதோ அவனிடத்தில் மொழி விருத்தி தொடர்பில் ஏதோ சிக்கல் இருக்கிறது என்பதே அர்த்தம்.

இந்நிலையில் பிள்ளைக்கு அவன் சிந்தை, செய்கை, உணர்வு என்பவற்றின் வெளியீடு ஊடகமாக (Communication Media) அமையும் மொழி. அவன் சார்ந்துள்ள சமூகத்தின் குறியீடாக - வெளிப்பாடாக அவனது இனத்தின் பண்பாட்டை, மேன்மையை, கலாசாரத்தை தாங்கிக்கொண்டு செழுமையும் பெறச்செய்வது சிந்தித்து மகிழத்தக்கது.

பிள்ளையின் பேசுகின்ற செயற்பாடு, தாயின் தொழிற்பாட்டிலேதான் ஆரம்பிக்கிறது. எனவே, தாய்தான் முதல் மொழி ஆசிரியர்! அவளிடத்திலே பயின்று வாழ்ந்த மொழி தானே தாய்மொழி!

கல்வி விளக்கத்துக்கு மொழியின் இன்றியமையாமையை என்னென்பது! ஏனெனில் மொழிதானே கல்வியின் ஊடுபாகருவி!

தாம்பெற்ற அறிவை மேலும் விரிவாக்க உதவுவதும், கலைத்திட்டத்தின் கருவியாய மைவதுமான தாய்மொழி மைக்கல் வைற்ஸ் மென்னின் கருத்துப்படி "வாழ்க்கையில் குழந்தையை ஈடுபடுத்தும் ஒன்று" எனப்படுகிறது. பாடசாலை வாழ்க்கை உடல் என்றால் மொழி உயிர் என்று கூட வர்ணிக்கலாம்.

நாம் பேசும் வாழ்க்கைமொழி எம்தாய்ப்பால் போன்றது, என்றார் கவியரசர் தாகூரும்.

எளிமையும், (Simplicity) இனிமையும் (Clarity) தெளிவும் (Emphamy) நிறைந்த நந்தமிழ் மொழியின், இன்றையமுட்டறுத்து நாளைய சந்ததிக்கு வழங்க இன்றைய தமிழ்க் கல்வியுலகம் பாடுபடுவது தவிர்க்க முடியாத தேவையே.

"ஆசிரியமணி"
**எம். எஸ். ஸ்ரீதயாளன்,** B. A. (Cey.) Dip-in Ed.
(ஆசிரிய ஆலோசகரும், செயற்றிட்ட அலுவலரும்.-தமிழ்)
கல்வியலுவலகம் - யாழ்ப்பாணம் - 01

# மாதா, பிதா, குரு, தெய்வம்

மாதா, பிதா, குரு, தெய்வம் இவர்கள் நால் வகைக் குரவர்கள் என அழைக்கப் படுகிறார்கள். இவர்கள் அனைவரும் எமது கண்கண்ட தெய்வங்களாக போற்றப்படுகிறார்கள்.

**"பத்து மாதம் சுமந்திருந்து பெற்றாள்"**
**பகலிரவாய் விழித்திருந்து வளர்த்தாள்,**
**வித்தகனாய் கல்வி பெற வைத்தாள்,**
**மேதினியில் நான் வாழ செய்திடுவாள்"**

ஆம். எமது அன்னை எம்மை பத்து மாதம் சுமந்திருந்து பெற்று, பத்தியம் இருந்து பாலூட்டி, சீராட்டி, தாலாட்டி, கண்ணை இமைகாப்பது போல் எம்மை காத்து வருகிறாள். அவள் எமக்காகச் செய்த தியாகங்களும் பத்தியங்களும் எத்தனை எத்தனை? எம் கண்ணில் நீர் வழிந்தால் அவள் கண்ணிலே இரத்தம் கொட்டும். இவை மட்டுமா? தன் இரத்தத்தையே பாலாக்கி எமக்குத் தருகிறாள். இவளைப் போல் வேறெவரும் மேலாக உண்டோ. "அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை, அவள் அடிதொழ மறுப்பவன் மனிதனில்லை" என்று கவிஞன் ஒருவன் அழகாகப் பாடியுள்ளான். இன்று பிள்ளைகள் பெற்றவர்களை மதிக்கிறார்களா? கை நீட்டி அடிக்குமளவுக்கு வந்து விட்டார்களே?

நாள் முழுதும் மாடாக உழைத்து, ஓடாகத் தேய்ந்து, கண் துஞ்சாது, பசி நோக்காது, தன் பிள்ளையின் வாழ்வே தன் வாழ்வென மதித்து உழைத்து, உழைத்து களைத்து, இளைத்து விடுகிறார், எம் பிதா "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" என்றொரு முது மொழி உண்டு. அதன் படி நாம் செயற்படுகிறோமா? இல்லவே இல்லை. தந்தையொன்று சொல்ல நாம் ஒன்றைச் செய்கிறோம். தந்தையை எதிர்த்து நிற்கும் பிள்ளை முன்னேறாது. தந்தையர் எமக்கு நல்லவற்றையே சொல்லிக் கொடுக்கிறார்கள். அதை ஏற்க நாம் ஏன் மறுக்கிறோம்?

**"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல.**
**நெஞ்சத்து நல்லம் யாமெனும் நடுவு நிலைமையால்**
**கல்வியழகே அழகு"**

என்று ஒரு கவிஞன் பாடியுள்ளான். இந்தக் கல்வியை எமக்குப் புகட்டுவது எம் குரு என்றால் அது மிகையாகாது. கல்வியை மட்டுமா? ஒழுக்கம், இறை பக்தி, போன்ற நன்நெறிகளை புகட்டுவது ஆசான் தானே? இவர்களுக்கு நாம் கீழ்ப்படிந்து இவர் தம் சொற் கேட்டு, அமைந்து வாழுதல் எம்தலையாய கடமையாகும். நாம் இவர்களுக்குரிய மரியாதையை செலுத்துகிறோமா?

அடுத்ததாக தெய்வம், எம்மைப்படைத்துக், காத்து, வழி நடத்தி வருகிறவர் தெய்வமே. இவ்வுலகிலுள்ள அனைத்து படைப்புகளும் இவரின் கை வண்ணந் தான்.

எனவே இக்குரவர்கள் நால்வரின் படியும் நடவாதவர்கள் கீழ்நரகிற் புகுவார்கள். அவர்களின் வினைகளை அவர்கள் தான் அறுப்பார்கள். எம்தாயின், தந்தையின், குருவின், தெய்வத்தின், எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும் எவை என்பதை சிந்திப்போம்.

கற்றவர் அவையினிலே தன் மகள், மகன் முந்தியிருக்க வேண்டுமென தாயும் தந்தையும் எதிர்பார்த்து நிற்கிறார்கள். இவர்களுக்கு நாம் காட்டும் நன்றிக் கடன்களை முடிக்கத்தானே வேண்டும். இவர்களின் இறுதிக் காலங்களில் நாம் இவர்களை பராமரிக்க வேண்டும். நாம் நன் நிலைகளில் இருக்கும் போது இந்த நிலைக்கு எம்மை ஆளாக்கியவர் களை மறந்து விடக்கூடாது. அவர்களுக்குரிய கடனை தீர்க்கத்தான் வேண்டும்.

அடுத்து ஆசானுக்கு செய்ய வேண்டிய கடமை எவை? நாம் எம் காலத்தில் நல்ல பட்டம் பதவியில் இருக்கும் போது அது ஆசானுக்கே பெருமை சேர்த்துத் தருகிறது. இதுவே நாம் ஆசானுக்கு செய்ய வேண்டிய கடன்.

எம்மைப் படைத்து இவ்வுலகில் வாழவைத்த தெய்வத்தின் விதிமுறைகளின், படி வாழுதலே எம் தெய்வத்தின் கட்டளையாகும்.

எனவே, இந்த அன்பு மயமான, யோதி மயமான, இரக்க மயமான, அருள் மயமான. எம்கண்கண்ட தெய்வங்களாகிய நால்வகை குரவர்களின் எதிர்பார்ப்புகளின் படி வாழுதலே அவர்களுக்கு சிறப்பைத் தேடிக் கொடுக்கும்.

கட்டுரை பிரிவு -3
**செல்வி. சே. ரெனிக்கா குரூஸ்**
மன்/ புனித மரியாள் பெண்கள் வித்தியாலயம்,
பேசாலை.

"வண்டு தேடி மலர்த்தேன் உண்ணும்
கண்டது கற்கப் பண்டித னாவான்
உண்டது மேலும் உறங்குவதன்றிப்
பண்டையோர் கலையால் பண்புறலாமே!"

07

# வெற்றிப் பாதை

பாலன் மிகவும் களைத்துப்போய்க் கால்கள் தள்ளாட தள்ளுவண்டியைப் பிரதான வீதியின் கரையோரமாகத் தள்ளிக் கொண்டு சென்றான். சூரியனின் வெப்பக் கதிர்கள் பூமியை வாட்டிக் கொண்டிருந்தது. செருப்புப் போடப்படாத பாலனின் கால்கள் வெப்பத்தைத் தாங்க முடியாமல் பொக்களம் போட்டன. போதாக்குறைக்கு தள்ளுவண்டியின் பாரம் அவனது பலத்தினைப் பரீட்சித்துப் பார்ப்பது போல் இருந்தது.

அங்கங்கே பொத்தல் விழுந்த உடையும் பலவாரங்களாக எண்ணை தேய்க்கப்படாமல் அங்கும் இங்கும் கலைந்து கிடந்த முடியுமாக மெலிந்த தேகத்துடன் காணப்பட்ட முப்பதே வயதான பாலனின் இறந்த காலம் மிகவும் அழகானது. ஆடம்பரமானது.

பாலனின் அப்பா சோமசுந்தரம் யாழ் நகரின் பிரபல புடைவைக் கடை ஒன்றின் உரிமையாளர். தொழிலில் மிகுந்த திறமை உடையவர் என்பதனால் பெரிய செல்வந்தராகவும் விளங்கியவர். அவர்களின் ஒரே மகன்தான் பாலன் என்பதனால் பெற்றோர் அவனை மிகவும் செல்லமாக வளர்த்தனர். அவனது தேவைகள் அனைத்தும் உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டன. நாளொரு உடையும் பொழுதொரு அலங்காரமுமாக வளைய வந்த பாலன். இவற்றிற்கெல்லாம் மேலான அணி கல்விதான் என்பதை மறந்தான். அதனால் தினக் கூலிக்குச் செல்லும் ராமலிங்கத்தின் மகன் கந்தன் அல்லும் பகலும் அரும்பாடு பட்டுப் படிப்பதை எள்ளி நகையாடவும் தயங்கவில்லை.

அவன் உணவு உண்ணவில்லை என்றால் ஆயிரம் கவலை கொண்டு அன்போடு பேணிய பெற்றோர். அவன் கல்வி கற்கவில்லை என்பதைப் பெரிய குறையாக நினைக்கவில்லை. எம்மிடம் உள்ள செல்வமே நான்கு தலைமுறைக்குப் போதுமே. இப்போது இவன் படித்து "என்னத்தைக் கிழிக்கப் போகின்றான்" என்பது அவனது பெற்றோரின் வாதம். இது பாலனுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது என்று கூறினால் தப்பில்லை. துள்ளும் இளம் கன்று பின்னொரு நாளில் பொதிசுமக்கும் என்பதை அறியாதவனாய்த் திரிந்த பாலனிற்கு அதனை உணர்த்துவனவாகத் தொடர்ந்து வந்த சம்பவங்கள் இடம்பெற்றன.

ஆம். இப்போது நினைத்தாலும் பாலனிற்கு அழுகையைத் தரக்கூடிய நிகழ்வது. அன்று வழக்கம் போலத்தான் விடிந்தது. ஆனால் அந்நாள், அவ்விடியல் பாலனின் வாழ்க்கையில் பல மாற்றங்களை, வெறுக்கத்தக்க வேதனைமிக்க மாற்றங்களை ஏற்படுத்திச் சென்றுவிட்டது. அன்று காலையில் யுத்த பூமியாம் யாழ் நகரினை வட்டமிட்ட இரு இயந்திர வல்லூறுகள் இட்ட இரு குண்டு எச்சங்கள் அவனது தந்தையின் புடவைக் கடையின் மேல் விழுந்து அனைத்துப் பொருட்களையும், கட்டடத்தையும், அங்கு வேலை செய்த இரு சிப்பந்திகளின் உயிரையும் தன் கொடும்பசிக்கு இரையாக்கிக் கொண்டது. இதனைக் கேட்ட பாலனின் தந்தை மாரடைப்பால் இறந்து போனார். தாயாரோ பித்துப் பிடித்தவர் போலானார். ஒருவாறு தந்தையின் இறுதிக் கிரியைகளை முடித்துவிட்டு அப்பாடா! என்று இருந்தவனிற்கு தந்தையுடைய கடைக்கு பங்காளிகளாகச் சேர்ந்த இருவரின் வரவு மீண்டும் சோதனை கொடுத்தது. தமது பங்குப்பணத்தைத் தரச் சொல்லி வற்புறுத்திய அவர்கள் அது கிடைக்கவில்லை என்பதனால் பாலனையும் தாயாரையும் வீட்டினை விட்டு வெளியேறுமாறு கட்டளை இட்டனர்.

வேறு வழியின்றி வயதான தாயாருடன் வெளியேறிய பாலன் ஒரு குடிசை அமைத்துத் தாயாரைத் தங்க வைத்தபின் வேலை தேடிப் புறப்பட்ட போது தான் கல்வியின் நிலைத்த தன்மையும் பயன்பாடும் புரியத் தொடங்கியது. சிறிதளவே கற்ற அவனிற்கு இத்தள்ளு வண்டி தான் அவனது தாயாரைக் காப்பாற்ற வழி சொல்லிக் கொண்டு இருக்கிறது. இவ்வாறு கடந்த காலத்தை எண்ணிக் கொண்டு வண்டியைத் தள்ளியவன் எதிரே ஒரு கார் வந்து கொண்டிருப்பதைக் காணத் தவறி விட்டான்.

பெருத்த சத்தத்துடன் கார் சிரமப்பட்டு நின்றது. அப்போதுதான் சிந்தனை கலைந்து நிகழ்காலத்திற்கு வந்த பாலன் காரில் இருந்து ஒரு கனவான் இறங்குவதைக் கண்டதும் அவரிடம் தான் வாங்கப் போகும் திட்டுக்களை எண்ணி கூனிக் குறுகி நின்றான் மாறாக அக் கனவான் தன்னைப் பார்த்துப் புன்னகைப்பதைக் கண்டதும் திகைப்பில் உச்சிக்கே சென்று விட்டான் "யார் இது?" என்று பலமாகச் சிந்தித்துக் கொண்டு நின்றவனை "நீ பாலன் தானே" என்ற குரல் எங்கோ கேட்டுப் பழகிய குரலாக எண்ண வைத்தது. ஆமாம் என்பதற்கறிகுறியாகத் தலையை மேலும்கீழும் ஆட்டியவன் "நீங்கள் யார்?" என வினவுவது போலப் பார்த்தான். "என்னைத் தெரியவில்லையா?" "நான் தான் கந்தன்" என்றதும் திகைத்துப் போனான் பாலன். கந்தனா? இவன் கந்தனா? கூலி வேலை செய்யும் ராமலிங்கத்தின் மகனா? இவன்? எனப் பலவாறு எண்ணி நின்றவனை, கந்தனின் அன்பான பார்வை நாண வைத்தது. தலை குனிந்து நின்றவனைக் கந்தன் அன்பாகத் தட்டிக் கொடுத்து "மாலை உன் வீட்டிற்கு வருகிறேன்" எனக் கூறிவிட்டகன்றான். தான் கண்டதெல்லாம் கனவா? நிஜமா? எனப் புரியாது நின்றவனைத் தள்ளுவண்டி மீண்டும் தள்ளிச் செல்லுமாறு அழைத்தது. அவன் தனது வேலையைத் தொடர்ந்தான்.

மாலையில் சீக்கிரமே வேலை முடித்து தன் வீட்டிற்கு ஓட்டமும் நடையுமாகச் சென்ற பாலன் தான் காலையில் கண்டவற்றை எல்லாம் தன் தாயாரிடம் சொன்னான். கண்களில் நீர் வழிய எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த அத்தாய் "மகனே கந்தன் தற்போது உயர்ந்த நிலையில் இருக்கிறான். ஆனால் நீயோ மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கின்றாய் இதற்கு நாங்கள் தான் காரணம்" ஆம் அன்று நீ பாடசாலை செல்லாது நின்ற போது உனக்குப் புத்தி கூறி மீண்டும் அனுப்பி வைத்திருந்தால் நீயும் அவனைப் போல ஒரு நல்ல நிலையில் இருந்திருப்பாயல்லவோ என்று கூறிக் கண்ணீர் வடித்தார். இதனைக் கேட்க ஆற்றல் இல்லாதவனாய் ஏதோ சொல்ல வந்த பாலன் ஒரு கார் வந்து நிறுத்தப்பட்ட சத்தம் வாசலுக்கு அழைத்தது. ஓடிச் சென்று பார்த்தவன் அங்கு கந்தனின் காரைக் கண்டவுடன் அருகில் ஓடிச் சென்றான்.

காரில் இருந்து இறங்கிய கந்தனை "வாருங்கள்" என வாய் நிறைய அழைத்த பாலன் ஓடிச் சென்று முறிந்து கிடந்த நாற்காலியை சரிப்படுத்திக் கொண்டு வந்து போட்டான் அதிலமர்ந்த கந்தன் பாலனின் சோகக் கதையைப் பொறுமையுடன் கேட்டான் பின் தனது கதையைக் கூறத் தொடங்கினான்.


"பாலன் நீ என்ன நினைக்கின்றாயோ தெரியாது. நான் இன்று இந்நிலையில் இருப்பதற்கு நீயும் ஒரு காரணம். எப்படித் தெரியுமா? தினக்கூலி வேலை செய்யும் எனது தந்தைக்குப் பிறந்த எனக்குப் படிப்பெல்லாம் ஒரு கேடா என முன்பு நீ கேலி செய்வாய். அதுவே எனக்குள் ஒரு வெறியைத் தூண்டி விட்டது. பிச்சை எடுத்தாயினும் கற்றல் வேண்டும் எனச் சான்றோர் கூறியதை மனத்தில் பதித்துக் கொண்டு சமூகத்தில் ஒரு சிறந்த இடத்தைப் பிடிக்க வேண்டும் என்பதை இலட்சியமாகக் கொண்டு கற்றேன். இன்று நான் வங்கியில்

காசாளராய்க் கடமையாற்றுகின்றேன். சமூகத்தில் எனக்கு என ஒரு நல்ல இடத்தையும் பிடித்துக் கொண்டு விட்டேன். இப்போதாவது கல்வியின் சிறப்பை நீ புரிந்து கொண்டிருப்பாய் என எண்ணுகின்றேன். இவ்பொழுது நான் வந்த விடயம் என்ன எனில் எமது வங்கியில் ஒரு பியோன் வேலை வெற்றிடமாய் உள்ளது. அதில் சேர விருப்பம் இருந்தால் நாளை அலுவலகத்திற்கு வா. பியோன் வேலை என்று கீழ்த்தரமாய் எண்ணி விடாதே. அவ்வேலையில் இருந்தவாறே தொடர்ந்து படித்து நீ பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொள்ளலாம். இருட்டிக் கொண்டிருக்கின்றது. வேறு என்ன? நான் சென்று வருகிறேன். என நீண்ட நேரம் தானே பேசிவிட்டு புறப்பட்டுச் சென்று கொண்டிருந்த கந்தனைப் பார்த்த பாலனின் மனத்தில் ஒரு நம்பிக்கை ஒளி தோன்றியது.

"கல்விக்கு வயதில்லை. கற்பவர்க்கு வயது தடையில்லை" எனத் தனக்குள் முணு முணுத்தவாறே நடை போட்டான் பாலன். அவனுக்கிப்போது எதிர்காலத்தைப் பற்றிய கவலை எதுவுமே எழவில்லை. கல்வி எனும் ஒளி அவனது இதயத்தின் உள்ளே இனி பிரகாசிக்கப் போகிறது. வெற்றிப் பாதையில் நடை போடப் போகும் அவனை நாமும் வாழ்த்துவோமாக.

பிரிவு 04
**பூ. சௌதாயினி**
வ/சைவப் பிரகாசா ம. ம. வி.

**'கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினுங் கற்கை நன்றே'**



# வெண் புறாவே



# விரைந்து வா

என்னைப் பிரிந்து போகிறவளே
இதுகேள் - இனி எனக்கில்லை
இலையுதிர்காலம் - பட்டமரத்துக்கு
ஏதடி இலையுதிர்காலம்.

பரந்து கவிழ்ந்த நீலவானிலே
பறந்து திரியும் வெண்புறாவே
கொதித்து எழும் மரணதேவன்
கொற்றம் தீர்க்க என்று வருவாய்?

தேசமெங்கும் இரத்த வெள்ளம்
தேடித் திரிகிறேன் பாசஉள்ளம்
வானில் நீந்தும் வண்ண நிலவும்
வாடியதேன் மனிதம் கண்டு.

சமாதானத்துக்கு உன்னைத் தூது விட்டேன்.
சரம் சரமாய் பல கடிதம் தந்தேன்.
சமாதானம் என்ன வீட்டிலில்லையோ - இல்லை
அதன் வீட்டிற்கு விலாசமில்லையோ!

சிங்கத்தின் குகையில் மழலை மொழி
சீறிடும் பாம்புப் புற்றில் மழலை உடல்
பாய்ந்து சென்று மீட்டுவர யாருமில்லை
மனிதம் மீட்க வெண்புறாவே விரைந்து வா.

கொடுக்கும் தெய்வம் - கூரையையும்
பிய்த்துக் கொடுக்கும் - ஆனால்
கூரையே நமக்கில்லை - என்ன
கிடைக்கும் வெண்புறாவே.

நீ எனக்கு தூரத்திலிருந்தாலும்
என் பக்கத்தில் இருக்கிறாய்
நீ என் பக்கத்தில் இருந்தாலும்
என்னை விட்டு தூர இருக்கிறாய்.

வெண் புறாவே எனக்கு வந்து விட்டது
நெஞ்சுவலி - ஆம் அது என்
வீட்டில் ஆரம்பித்து - உன்
வீதி வரை நீண்டு விட்டது விரைந்துவா.

போர் வெள்ளம் பாய்ந்தது
வறுமைக் கடல் நிறைந்தது.
பந்த பாசம் முறிந்தது - எங்கள்
சமாதானம் எங்கே தொலைந்தது சொல்.

வெண்புறாவே நீ இலங்கை வாராய்
மறக்காமல் உன் அடையாள அட்டையை
கொண்டு வாராய் - இறைவன் வந்தாலும்
இலங்கையில் இன்று நிலை இதுதான்.

கடற்கரையில் - காணாமல் போன காசும்
காண விரும்பும் தனிமையும் கிடைக்காது.
தேடி அலைகிறேன் - தொலைந்து விட்ட சமாதானத்தை
கண்டு பிடிப்பேனா. கண்ணீர் வடிப்பேனா!

போர்மொழி - ஓ விஞ்ஞானமே அறிவு கொடு
ஏ மனிதா உணர்வு கொடு.
மனித மொழி - ஓ வெண்புறாவே விரைந்து வாராய்
வீறு கொண்டபோரைத் தீர்க்க வாராய்.

கடலிலே முத்தை வைத்தான்
காதலில் துன்பம் வைத்தான்
மடலிலே மணத்தை வைத்தான்
மங்கையில் சுகத்தை வைத்தான்

உடலிலே உயிரை வைத்தான்
உள்ளத்தில் ஆசை வைத்தான்
இடரிலே என்னை வைத்தான்
எங்கு தான் அமைதி வைத்தான்;

வெண்புறாவே விரைந்து வா
வேட்கைகளை தீர்க்க வா
சமாதானம் கொடுக்க வா - போரை
ஒழிக்க வா வெண்புறாவே விரைந்து வா

வானில் பறக்கும் வெண்புறாவே
உன் வருகைக்கு என் கோடி வணக்கம்
கொண்டு வா சமாதானம்
கொள்ளையான மகிழ் வாரவாரம்.

இலங்கை வருகைக்கு
இசைந்து வாழ்த்துகிறேன்
துவண்ட மனிதத்தில்
துணிந்தே வாழ்த்துகிறேன்.

கவிதை
பிரிவு 04
**டி. பி. சந்திரலால்**
தி/புனித சூசையப்பர் கல்லூரி

**"இருந்த தமிழே உன்னால் இருந்தேன் இமையவர்தம்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"**

-தமிழ் விடுதூது-

# மாலை நேரத்தில் கடற்கரைக் காட்சி

அன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள் தொடர்ந்து நான்கு நாட்கள் விடுமுறை என்பதால் எனது நண்பி என் வீட்டிற்கு வந்திருந்தாள். அன்று மாலை நானும் நண்பியும் கடற்கரைக்குச் செல்வதெனத் தீர்மானித்தோம்.

மாலை நான்கு மணியளவில் நாம் அப்போது பட்டம் ஏற்றும் காலமாகையால் அதனைப் பார்க்கும் ஆவலுடன் சென்றோம். வீதியெங்கும் "மடை திறந்த வெள்ளம் போல" சனங்கள் சாரிசாரியாகச் சென்று கொண்டிருந்தனர். அவர்களுடன் நாமும் சேர்ந்து சென்றோம்.

கடற்கரையில் ஆயிரக்கனக்கான மக்கள் இயற்கையின் எண்ணிலடங்கா எழிற்கோலங் களை இரசித்துக்கொண்டிருந்தனர் கடற்கரையிலிருந்த தென்னை மரங்ளெல்லாம் காற்றால் அசைந்தாடுவது அங்கு வருவோரை வரவேற்பது போல் இருந்தது. அலைகளெல்லாம் பொங்கி எழுந்து தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தன.

வானத்தை நிமிர்ந்து பார்த்தாலோ எங்கும் வண்ணவண்ணப் பட்டங்கள் அவற்றில் பல வண்ணங்கள், எங்கும் ஆரவாரமாக இருக்கிறது. சின்னஞ்சிறு குழந்தைகள் அப்பட்டங் களைப் பிடிப்பது போல் தாவுகின்றனர். எட்டாத பழத்திற்குக் கொட்டாவி விடுகின்றனர். அங்கே வீசும் இதமான தென்றல் காற்று எல்லோரையும் தாலாட்டிச் செல்கிறது.

வேறு சில சிறுவர்கள் அங்கே சிப்பி சோகி பொறுக்குகின்றனர். கடற்கரை மணலிலே விளையாடுகின்றனர் அவர்கள் முகத்தில் புன்னகையும் சந்தோசமும் நிரம்பி வழிகிறது.

அங்கே கடலை, சுண்டல் விற்போர், போன்ற நடமாடும் வியாபாரிகள் தங்கள் பொருட் களை விற்றுக்கொண்டிருந்தனர். வேறு சிலர் கடற்கரையை கண்வெட்டாது இரசிப்போரின் உடைமைகளைத் திருடுகின்றனர். எல்லாவற்றையும் நாம் கண்டு எங்கள் உடைமைகளைப் பாதுகாத்துக் கொள்கிறோம்.

நேரம் செல்லச் செல்ல சூரியன் தனது கடமைகளை செவ்வனே செய்து முடித்த திருப்தியுடன் தன் வெப்பம் தணிக்க மேற்குக் கடலினுள் இறங்கத் தொடங்கினான். அவனது கதிர்கள் கொந்தளிக்கும் கடலலைகளைச் செந்நிறமாக்குகின்றன. அவை தங்கப் பாளங்கள் போல தோன்றின

ஆகா! என்ன அழகு!

அதே நேரம் கிழக்குக் கடலினுள் ஒரு அதிசயம்! வட்டநிலா தன் கடமையைச் செய்ய சிரித்த முகத்துடன் துள்ளி எழுகிறது. அதுவும் கடலலைகளை பொற்பாளங்களாக்கி பார்ப்பவர் கண்களைக் கூசச் செய்கிறது.

இரண்டு காட்சியையும் ஒன்றாகக் காணும்போது என் கண்களையே நம்ப முடிய வில்லை. இதனைக் காண நான் என்ன தவம் செய்தேன். அக்காட்சியைக்காண கோடிக்கண்கள் போதாது

கடலலைகள் ஆரிவாரித்து தமது மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றன. ஆ! எத்தனை அழகு அதனால் சென்ற ஒரு பையன் கடற்கரையைக் கண்டு "என்ன அழகு! எத்தனை அழகு! " என்று பாடிக்கொண்டு சென்றான்.

சிறிது நேரத்தில் சூரியன் முற்றிலும் மறைய சந்திரன் மேலெழத் தொடங்கினான் அதனைக் கண்ட சிறுவர்களின் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை.

அங்கே முதியவர்கள் காலாற நடை பழகுகின்றனர் சிறுவர்கள் ஓடியாடி விளையாடு கின்றனர். பெரியோர்கள் மணற் கும்பிகளில் இருந்து ஊர்விவகாரங்களைப் பேசுகின்றனர்.

சிறிது நேரத்தில் சந்திரன் உலாவர அவனைச் சுற்றி பல நட்சத்திரங்கள் கண் சிமிட்டத் தொடங்குகின்றன. அதனை நினைக்கையில்

**'மீனினம் ஓடிப் பாக்குதம்மா - ஊடே**
**வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா'**

என்ற பாட்டு நினைவிற்கு வருகிறது.

சிறுவர்கள் பட்டங்களை இறக்குகின்றனர். கரைவலை மீன் பிடிப்போர் மீன் பிடிக் கின்றனர். மீன்பிடிக்க வள்ளங்களில் மீனவர் செல்கின்றனர் இவையாவும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கின்றன.

இவையாவற்றையும் கண்டு களித்த திருப்தியுடனும் மகிழ்வுடனும் நாம் கண்ட காட்சிகளை மீள நினைத்து இரசித்தபடி வீடு திரும்பமனமின்றி சென்றோம். இனியும் நாம் அக்காட்சியைக் காண்போமா?

**நீரஜா - சிவகணேசன்**
யா/மெதடிஸ்த உயர்தர பெண்கள் பாடசாலை

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும்"

14

# ஏற்றிய தீபம்

"கதாகரன் எனும் மாணவனை முதலில் இச்சான்றிதழையும் புத்தகப் பொதியையும் பெற்று கொள்வதற்காக அழைக்கின்றோம்"

ஒலிபெருக்கி அலறியது.

சின்னஞ் சிறு பையன், கிட்டத்தட்ட எட்டு வயதிருக்கும் அயன் கலையாத ஆடை எண்ணெய் தேய்த்துப் படிய வாரிவிடப்பட்ட தலை.

கண்களில் மிரட்சி துடுக்கான நடை - ராஜநடை மெல்ல மெல்ல நடந்து வருகின்றான்

அருகில் நின்ற ஆசிரியர் புத்தகப் பொதியையும் சான்றிதழையும் - பிரதம அதிதியிடம் வழங்க

பிரதம அதிதியின் கைகள் நடுங்குகின்றன.

இலேசாகத் தலை சுற்றுவது போன்றிருக்கின்றது

நினைவுச்சக்கரம் பின்னோக்கிச் சுழல்கின்றது

"என்னால பள்ளிக்குப் போக முடியாதம்மா. ஓட்டைக்களிசானை எத்தனை நாளைக்குத் தான் தைச்சுத் தைச்சு போட்டுக் கொண்டு போவது. தபால் பெட்டி எண்டு கிண்டல் செய்கினம் மற்றவங்க நேற்று கணித வாத்தியார் பயிற்சிப் புத்தகம் வாங்காததற்கும் என்னை அடி அடியென அடிச்சுப் போட்டார். அடிச்சாலும் தாங்கியிருபேனம்மா "நாலுகாசுக்கு கொப்பி வாங்க வக்கில்லாதவனுக்கெல்லாம் எதுக்குடா படிப்பு" என்று எல்லோர் மத்தியிலும் வச்சு அவமானப் படித்திற்றாரம்மா. எந்த முகத்தோட நான் திரும்பி பள்ளிக்குப் போவேன்?" தேம்பித் தேம்பி அழுதான் சுபன், தாயின் மடியில் தலை வைத்தவாறு

மங்கம்மாவின் தொண்டை அடைத்தது.

கண்களில் நீர் நிறைந்து வெளியே வருவோமா இல்லையா என்று எட்டிப்பார்த்தது.

சுமை தாங்கியே சாய்ந்தால் சுமைகளுக்கு என்ன கதி?

எச்சிலைக் கூட்டி விழுங்கிக் கொண்டு பேசினாள்

"என் ராசா செல்ல மகனே கல்விதாண்டா எம் போல் பரம ஏழைகளுக்குக் கடவுள் கொடுத்த வரம். ஒன் அப்பனோ என் அப்பனோ எதையடா எமக்கு சேர்த்து வைத்தாங்க கல்வியைத்தாண்டா சொத்து சேர்க்கல பணம் சேர்க்கல இதையெல்லாம் சேர்த்து வைக்க இறைவன் நமக்குக் குடுத்து வைக்கலடா மகனே. ஆனா கல்வியைக் கற்பதற்கு நல்ல மூளையை குடுத்திருக்கார்டா அது போதும் நாம கரைசேர உன் அப்பா அடிக்கடி சொல்லும் வார்த்தை " நான் செத்தாலும் என் பிள்ளையைப் படிக்க வச்சுப் பெரிய ஆபிசராக்கிடு மங்கம்மா. எப்பாடுபட்டாலும் எம்பிள்ளையை படிப்பிச்சி ஆளாக்கிடு அப்பதான் என் ஆத்மா சாந்தியடையும்"

மங்கம்மா நா தழுதழுக்கக் கூறி முடிக்குமுன்னே......

சுபன் மௌனமாக அழுதான். மங்கம்மாவின் கண்களிலிருந்தும் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது.

கனத்த சுமைகளோடு அன்றைய இராப்பொழுது சங்கமித்தது

மங்கம்மா......
ராசையாவின் அன்பு மனைவி
சுபனின் முன்னெறி தெய்வம்

ராசையா ஏதாவது கூலி வேலை செய்து கொண்டு வரும் பணத்தினால் மூன்று வயிறுகளும் அரை வயிறு கால்வயிறுமாக நிரம்பியது கடவுள் புண்ணியத்தால்

சென்ற வருடம் மார்கழி மாதத்தில்
மாரிமழை
மங்கம்மா வைத்த பேணிகள் எல்லாம் நிரம்பி விட்டன வீட்டுக்கூரையால் வடிந்த நீரால்

"என்னங்க சுபனுக்கும் காய்ச்சல் கொதிக்குது. நாட்டு வைத்தியரிட்டயாவது காட்டி மருந்தெடுக்க காசில்லை ஆதங்கமாய்க் கூறினாள்

"ஏதாவது வயலில் வேலை கிடக்குமா எண்டு பார்த்துக் கொண்டு வாறன்."

கூறிவிட்டு மார்கழி மாத மழை இருட்டில் போனவர் திரும்பி வரவேயில்லை

நான்ங்கைந்து நாள்களின் பின் அவன் வயலில் சடலமாகச் கண்டெடுக்கப்பட்டான். யார் செய்த சதியோ

மங்கம்மாவும் சுபனும் யாருமற்ற பாலைவனத்திலே தனியே விடப்பட்டார்கள்.

மங்கம்மா பக்கத்துவீடுகளுக்குச் சென்று பாத்திரம் தேய்த்து வரும் பணத்தில் அவர்கள் அடுப்பெரிந்தது

அனேக நாள்களில் அவர்களது வீட்டின் அடுப்பில் பூனை உறங்கும். மங்கம்மா வீட்டு அடுப்புக்கும் பூனைக்கும் நிச்சயதார்த்தம் பற்றி எரியும் வயிறாகிய அக்கினி சாட்சி சுபனுக்கோ. ....

கல்வி... இறைவன் கொடுத்த வரம்

பக்கத்து வீட்டுப் பையன்கள் எல்லாம் விடுமுறை நாள்களில் மீன்பிடிக்க குளக்கட்டுக்குப் போவார்கள்

சுபன் புத்தகமும் கையுமாக வீட்டிலிருப்பான்.

படிக்காத நேரங்களில் தன் தாய்க்கு உதவி செய்வான். மங்கம்மா காலையில் எழுந்து அப்பம் ரொட்டி சுட்டு கொடுப்பாள். அதைக் கொண்டு போய் கடைக்குக் கொடுப்பது சுபனின் காலைக்கடன்.

மங்கம்மாவிற்கு இவ்வுலகிலுள்ள ஒரே ஒரு உறவு சுபன். சுபன் இல்லாவிட்டால் அவள் கணவன் இறந்த அன்றே அவள் பாடையேறியிருப்பாள்

அவளை நம்பி ஒரு ஜீவன் இவ்வுலகிலுள்ளதே

மங்கம்மாவின் இன்பமும் துன்பமும் சுபன்

மங்கம்மாவின் இதயம் டப் சுபன் டப் சுபன்" என்றுதான் அடிக்கும் என்று பக்கத்து வீட்டுப் பரிமளா சீண்டுவாள்

பரிமளா உயிரியல் விஞ்ஞானப் பிரிவின் மாணவி

நல்ல உடற்கட்டும் அறிவும் நிரம்பிய சுபனைப் பார்த்துவிட்டு மற்ற மாணவர்களுக்குப் பொறாமை

எப்போதும் வகுப்பில் முதலாவதாக வரும் சுபனை மிஞ்சி விட எத்தனை தடவை முயன்றும் தோற்றுப் போன ரவி "காற்றுக்குடிச்சி வளர சுபனைப் பார்த்தியடா என்னமாய் மார்க் வாங்கறான். கேக் சாப்பிட்டு வளர நமக்கு மூளை ஏண்டா வேலை செய்யமாட்டேங்குது"

வேண்டுமென்றே சுபனின் காதில் விழுமாப் போல கிண்டலடிப்பான்

சுபனிற்கு இதயத்தில் "சுருக்" என்னும்

ரவியை அடிக்க முடியாது ஏச முடியாது

ராசா வீட்டுக் கன்றுக்குட்டியல்லவா அவன்

அழுவதைத் தவிர வேறு வழியில்லை - சுபனுக்கு

அன்றும் அப்படித்தான்

மங்கம்மாவிற்கு சுகமில்லை அப்பம் சுட்டுக் கொண்டிருந்தபோதே வாந்தி எடுத்தாள் "பாம்புகள்" வெளியேறின

டாக்டரிடம் காட்டிய போது புற்றுக்கட்டி விட்டதாகக் கூற சுபன் அதிர்ந்து தான் போனான்

தான் நெடுநாளாய் மறைத்து வைத்திருந்த இரகசியம் மகனுக்குத் தெரிந்து விட்டதில் மங்கம்மாவிற்கு ஏகப்பட்ட அதிர்ச்சி

மங்கம்மா கெஞ்சினாள் "அப்பத்தைக் கொடுத்துவிட்டு பள்ளிக்குப் போய்வா மகனே"
தாயின் சொல்லைத் தட்ட முடியாமல் புறப்பபட்டான் சுபன்.

உண்மையிலேயே அவன் பாடசாலைக்குள் நுழையும் போது பாடசாலை ஆரம்பித்து விட்டது.

வீட்டு வேலைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த ஆசிரியர் சுபனிடம் வந்த போது சுபன் வீட்டு வேலையைச் செய்திருக்கவில்லை.

இரவு விடிய விடிய அவன் தாய்க்கு அருகிலேயே அழுது கொண்டிருந்ததில் அவனுக்கு வேலை மறந்துவிட்டது. ஆசிரியர் மன்னித்து விட்டாரோ தெரியவில்லை ஒன்றுமே பேசவில்லை முகத்தைத் திருப்பி விட்டார்.

பரீட்சைக் கட்டணம் கேட்டபோது சுபனிடம் பணம் இல்லை என்று அறிந்த போதுதான் சீறிப்பாய்ந்தார் "எத்தனை நாளைக்குத் தான் கொண்டு வராமல் விடுவது. படிக்க இஷ்ட மில்லாவிட்டால் வீட்டுக்குச் செல்வதுதானே"

திட்டியது மட்டுமல்ல அடித்தும் விட்டார்.

எழுந்து நின்ற சுபனைப் பார்த்து மாணவர்கள் "பக்கென்று சிரித்தும் விட்டனர்.

பின்னால் திரும்பிப் பார்த்தான்

காற்சட்டைக்கு அம்மா போட்டிருந்த "அண்டை" விலகி பல்லிளித்துக் கொண்டிருந்தது.

சுபன் கைகளால் பொத்திப்பிடித்தான்

பாடசாலையில் ஒரு கணமேனும் நிற்க அவன் மனம் இடந் தரவில்லை. அவனது கால் கள் தள்ளாடித் தள்ளாடி வீட்டை நோக்கி நடந்தன.

"நண்பர்கள் தான் சிறுவர்கள் என்றாலும் இந்த ஆசிரியர்களுக்குமா புத்தி பேதலித்து விட்டது. ஏன் இப்படி சின்னஞ்சிறுசுகளின் மனசு புண்படும் படியா பேசறாங்க?

சுபனின் மனதில் கேள்வி மேல் கேள்வி துளிர்த்தது

பதிலளிக்க யாருமில்லை

தாயின் மடியில் தலைவைத்து அழவேண்டும் போலிருந்தது. ரணப்பட்ட அவன் மனசுக்கு அவளின் அன்புதான் .............

மயிலிறகு வருடல்
அதுதான் இப்பொழுது அழுகின்றான்

தாயின் "கற்க வேண்டும்." என்ற வைராக்கியத்தின் முன்னே அவனது கவனச் சிதறல்கள் எல்லாம் கரைந்து போயின.

பேராசிரியர் சுபன் சமூகத்தில் அடிமட்டத்திலிருந்து கல்வியில் முன்னேறியவர். பெற்றவள் புகழைக் கற்றவன் சபையில் ஓங்கி ஒலித்திட பல தடைகளையும் தாண்டி முன்னேறி இன்று இந்தக் கல்வியுலகில் தனக்கெனத் தனியான இடதைப் பிடித்துக் கொண்டவர், அப்படியான ஒரு பேரறிஞர் எம் பாடசாலையின் தமிழ்த்தின விழாப் போட்டிப் பரிசளிப்பு வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டமை எம்மனைவருக்கும் கிடைத்த வரப்பிரசாதம். அன்னாரின் கைகளால் தமக்குரிய பரிசுப் பொதியைப் பெற்றுக் கொள்ளுமாறு கதாகரனை அழைக்கின்றோம்."

ஒலி பெருக்கி மீண்டும் அலறியது

கதாகரனின் கால்கள் பேராசிரியரை நோக்கிக் கிட்ட வந்தது

மண்டபம் நிறைந்த கரகோஷம் வானைப் பிளந்தது பேராசிரியர் சுபனின் கண்களில் இருந்து கண்ணீர்த்துளி ஒரு பரிசுப் பொதியில் விழுந்து பட்டுத் தெறித்தது.

எங்கும் மயான அமைதி.

**செல்வி. ஏ. கே. செபானா**
கமு/அக் - பற்று ஆயிஷா பாளிகா
மகா வித்தியாலயம், கல்முனை.

# பாரம்பரியக் கலைகள் மறக்கப்படக் கூடாதவை

தமிழ் மக்களின் பாரம்பரியக் கலை வடிவங்களுள் சிறப்பு மிக்கதான கூத்துக் கலை இன்று அருகி வருகின்றமை குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டிய ஒன்றாகும். நவீன நாடகங்கள், சினிமாத்துறை, வீடியோக் கலாசாரம் என புதுமைகளில் காட்டப்படும் ஆர்வம் பாரம்பரியக் கலை வடிவங்களில் காட்டப்படுவதில்லை. புதுமையைப் போற்றுவது சிறப்புக்குரியதென்றாலும் பழமையைத் தொடர்ந்தும் பேணிப் பாதுகாக்காதது வருத்தத்திற்குரியதாகும்.

மேடைப் பேச்சிற்காகவும் பத்திரிகைகளின் அறிக்கைக்காகவும் பாரம்பரியக் கலைகள் பற்றிப் பெரும்பாலானோர் கருத்துக் கூறி வருகின்ற போதிலும், அதற்கான செயற்பாட்டில் ஈடுபடுவது குறைவென்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உண்மையாகும். பாரம்பரியக் கூத்துக்கலை வடிவங்களை முன்னர் பேணி வளர்த்து வந்தோர் சமூகத்தில் உரிய அந்தஸ்து கிடைக்கப் பெறாத வறியவர்களாக இருந்தமையும், இளந் தலைமுறையினர் இவற்றில் போதிய ஆர்வம் காட்டாமையும் அல்லது அவர்களுக்கு அதற்குரிய வாய்ப்புக் கிடைக்காமையும் போன்ற சில காரணங்கள் இக் கலை வடிவம் அருகிச் செல்ல வேண்டிய துப்பாக்கிய நிலைக்கு கொண்டு சென்றது எனலாம்.

வடக்கு - கிழக்கின் சில பிரதேசங்களில் அவ்வப் பிரதேசத்தின் தன்மைகளை வெளிக் காட்டும் சிறப்புத்தன்மை மிக்க கூத்துக் கலை வடிவங்கள் காணப்படுகின்றது. என்றாலும் தமிழர்களுக்குரிய பொதுவான பாரம்பரியக் கலை வடிவம் ஒன்று தொடர்ந்து பேணப்பட வேண்டியதன் அவசியம் உணரப்படாமை கவலைக்குரியதே. எனவே இவ்விடயத்தில் அனைவரும் ஒன்றிணைந்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இம்முறை நடைபெறவுள்ள வடக்கு - கிழக்கு மகாணத் தமிழ்த் தினப்போட்டியில் பாரம்பரியக்கலை வடிவமான நாட்டுக் கூத்து, வடமோடி, தென்மோடி காத்தான் கூத்து, இசை நாடகம், பாரம்பரியக் கலைவடிவங்களை அடிப்படையாகக் கொண்ட புதிய கருத்துக்களை முன் வைக்கும் நாடகங்கள், அல்லது கூத்துக்கள் என்ற ஐந்து வகைகளாக நடைபெறுவதோடு நாட்டுக்கூத்து விழா ஒன்று நடைபெறுவது போற்றுதற்குரியது. இது முகவரியே அன்றி முடிவுரையல்ல. இது தொடர்ந்தும் ஒவ்வொரு ஆண்டும் நடைபெற வேண்டும் என அவாக் கொள்கிறேன். இதில் ஆர்வம் காட்டிய வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் மற்றும் கலைஞர்களுக்கும் பாரம்பரியக் கலை வடிவங்களின் ஆர்வலன் என்ற வகையில் நன்றி கூறுவதோடு, தேசிய மட்டப் போட்டியிலும் நாட்டுக் கூத்து இடம்பெற அனைவரும் முயற்சிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன்.

**ச. இரமணீகரன்**

*ஆசிரியர்*

*தி/செல்வநாயகபுரம்*

*அரசினர் தமிழ் வித்தியாலயம்*

# இனியொரு விதிசெய்வோம்

இளவேனில் வந்ததென்றா
இளங்குயிலே நீ இசைக்கின்றாய்
எங்கள் வாழ்க்கையில் இப்போது
இலையுதிர் காலமல்லவா?!

மனிதன் மனிதனோடு பழகாமல்
துப்பாக்கியோடு
நேசம் வைத்ததால்
துடிக்கின்றனர் இங்கு பலர்!

ஆண்டுக்காண்டு காலந்தான்
மாறுகிறது — ஆனால்
இந்தக் காசினி
மாறவே யில்லை!

சமாதானம் பாசத்தோடு
பார்க்க — யுத்த
அரக்கன் பாசக் கயிற்றினைக்
காட்டுகிறான்!

சிகரங்களில் சிறந்து
சிரிக்க வேண்டிய மனிதன்
பனைமரம் வெட்டிப்
பதுங்கு குழியமைக்கின்றான்!

மரங்கள் தான்
பூப் பூக்கின்றன
மனித மனங்கள் இன்னும்
தளிர் விடவுமில்லை!

புத்தாடை கட்டியே
மரங்கள் சித்திரைக்கு
வாழ்த்துப் பாடுகின்றன — ஆனால்
மாற்றாடை கூட இல்லாமல்
பல உள்ளங்கள் அகதி முகாம்களில்
உருக்குலைந்து கிடக்கின்றன!

வானம் வெளித்ததென்று
குயிலே நீ எண்ணாதே
இன்னும் சில நேரத்தில்
இயந்திர மேகங்கள் வரும்
குண்டு மழை பொழியும்
குருதி நதி பெருகும்
தென்றல் குருதியில் நனைந்து
நிணநாற்றம் சுமந்து வரும்!

துப்பாக்கிகள் – தினம்
மரண கீதம் இசைக்கின்றன
ஷெல் மேளங்கள் – அதற்கு
தப்புத்தாளம் போடுகின்றன!

கண்ணீரிலும் ரத்தத்திலும்
ஜனனித்த
மனிதர்கள் தான் இங்கு
வாழ்கிறார்கள்!

அருவி வெட்டுப்பா
இசைத்த இம்மண்ணில்
மனித அறுவடைப் பாக்களும்
இசைக்கப் படுகின்றன!

சுடுகாட்டுப் பாடையமைத்து
ஒப்பாரிப்பாடல் இசைத்து
உறவுகள் பல இழந்து
எவ்வளவு காலம் தத்தளிக்க முடியும்!

வாடா என் தேச மகனே
வாடாப்புகழ் பூத்தவனே
காடாகக் கடந்து வந்த
பாதையைப்பார்!

இதுவரை நாம் கண்டது வேதனை
இனிச் செய்வோம் ஒரு சாதனை
இதய பூமியின் ஓட்டைகளுக்கெல்லாம்
கட்டிடுவோம் ஒற்றுமை அணை!

கடந்த காலச் சோகங்களைக்
கலைத்து விட்டு
நிகழ்காலத்திற்கான நிதர்சனங்களைச்
சேகரிப்போம்!

துப்பாக்கியும் தோட்டாவும்
பாசம் வைப்பது போல்
தமிழும் முஸ்லிமும்
சிங்களமும் நேசம் வைத்தால்
நம் நாடும் – குன்றின்
விளக்காய் விளங்குமென்பது
நிச்சயிக்கப் பட்டிருக்கும்
நிஜமல்லவா!

எனவே இனியோர் விதி செய்வோம்
இளையோர் ஒன்று சேர்ந்து
சதி செய்யும் பேர் வழிகள் ஒழிந்திடவே
ஒலித்திடுவோம் ஒற்றுமை கீதம்!

விடியல் ஒன்றினை
வரவு வைப்போம் – அதில்
மானிட மனங்களை
மரியாதை பெற வைப்போம்!

சமாதானம் இங்கு
மலர வேண்டும்
சாந்தியும் சௌபாக்கியமும்
வந்தே தடவ வேண்டும்

தென்காசிச் சாரல்
வீச வேண்டும்
மோகனம் பாடியே நாம்
மகிழ வேண்டும்!

எனவே இனியோர்
விதி செய்வோம்
இளையோர்
ஒன்று சேர்ந்து!

கட்டுரைப் பிரிவு 05
**கந்தசாமி மோகனதாசன்**
மட்/கிரான் குளம் வி. ம. வி.

# வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மொழித்தினப் போட்டிகளின் பெறுபேறுகள் – 1997

| தொ. இல. | விடய இல. | நிகழ்ச்சி | பிரிவு | போட்டியாளர் பெயர் | பாடசாலை | மாவட்டம்/ வலயம் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4.1 | வாசிப்பு | 1 | செல்வி. ம. லோகபரணி<br>செல்வன். ப. திவாகரன்<br>செல்வி. வ. பவித்திரா | யா/மகாஜனாக் கல்லூரி<br>யா/புனித ஜோன் பொஸ்கோ<br>தி/உவர்மலை விவே.கல்லூரி | யாழ் வலயம் II<br>யாழ் வலயம் I<br>திருகோணமலை | 1<br>2<br>3 |
| 02. | 4.1 | வாசிப்பு | 2 | செல்வி. மே. அ. அன்ரனி<br>செல்வி. ஆ. பிருந்தா<br>செல்வி. கி. டெனேறின் குரூஸ் | மட்/புனித சிசிலியா ம. வித்தி.<br>யா/வடஇந்து மகளிர் கல்லூரி<br>மன்/சென்மேரிஸ் பெ. வி. பேசாலை | மட்டக்களப்பு<br>யாழ் வலயம் II<br>மன்னார் | 1<br>2<br>3 |
| 03. | 4.2 | எழுத்து-ஆக்கம் சொல்வ தெழுதல் | 1 | செல்வி. வி. மைதிலி<br>செல்வன். உ. லெ. அகமட்சப்றாஸ்<br>செல்வி. ச. பிரியங்கரி | தி/புனித பிரான்சிஸ் சவேரியர் ம. வி.<br>கமு/அல்-ஹிதாயா வி. அக். பற்று<br>யா/புனித ஜோன் பொஸ்கோ. வி. | திருகோணமலை<br>கல்முனை<br>யாழ் வலயம் I | 1<br>2<br>3 |
| 04. | 4.3 | கட்டுரை ஆக்கம் கடிதம் வரைதல் | 2 | செல்வி. செ. கவிதா பீரிஸ்<br>செல்வி. ம. சுவர்ணா<br>செல்வி. எஸ். காஞ்சனா | மன்/சென்மேரிஸ் பெ. வித்தி.<br>தி/புனித பிரான்சிஸ் சவேரியர் ம.வி.<br>கமு/கார்மேல் பாத்திமா தே. பா. | மன்னார்<br>திருகோணமலை<br>கல்முனை | 1<br>2<br>3 |
| 05. | 4.3 | - | 3 | செல்வி. தேவதாஸ் பிரமிலா<br>செல்வன். எஸ். ஆரோக்கியநாதன் -மொறாயஸ்<br>செல்வி. எஸ். தனுஷ்யா | மட்/கல்லடி விவேகானந்தா ம. வி.<br>மன்/புனித ஆனாள் ம. ம. வி<br>கமு/கார்மேல் பாத்திமா தே. பா. | மட்டக்களப்பு<br>மன்னார்<br>கல்முனை | 1<br>2<br>3 |
| 06. | 4.4 | கட்டுரை ஆக்கம் சுருக்கம் எழுது தல் விளம்பரம் ஆக்கல் | 4 | செல்வி. யூ. எல் சினிஸ்<br>செல்வி. அ. அனுராதா<br>செல்வன். க. கிரிசாந்<br>செல்வன். அன்பழகன் ரமணன் | கமு/ஆயிஷா பாலிகா ம. வி.<br>யா/வடமத்திய மகளிர் கல்லூரி<br>வ/தமிழ் மத்திய மகா வித்தி.<br>மட்/கிரான்குளம் விநாயகர் வித்தி. | கல்முனை<br>யாழ் வலயம் II<br>வவுனியா<br>மட்டக்களப்பு | 1<br>2<br>3<br>3 |
| 07. | 4.5 | தமிழியற் கட். எழுதுதல் தி.ஆ. செ. பொ. வி. எழுதுதல் | 5 | செல்வி. ஏ. டபிள்யூ. அஸ்மியா<br>செல்வி. த. பிரேமலதா<br>செல்வன். வே. நந்தகுமார் | கமு/அல்-மஸ்ஹர் உ. பா.<br>வ/நெலுக்குளம் கலைமகள் வித்தி.<br>யா/ஹாட்லி கல்லூரி. பரு. துறை | கல்முனை<br>வவுனியா<br>யாழ் வலயம்- II | 1<br>2<br>3 |

| தொ. இல. | விடய இல. | நிகழ்ச்சி | பிரிவு | போட்டியாளர் பெயர் | பாடசாலை | மாவட்டம்/ வலயம் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 08. | 4.6 | குறுநாடகம்<br>பிரதியாக்கம் | தி/<br>போ | செல்வன். ம. பிரவீணன்<br>செல்வன். ச. சயந்தன்<br>செல்வி. ஆ. அன்ரனிற்றா சில்வா | யா/யூனியன் கல்லூரி. தெல்லிப்பளை<br>வ/கணேஸ்வரா ம. வி.<br>மன்/நானாட்டான் ம. வித்தி | யாழ் வலயம் II<br>வவுனியா<br>மன்னார் | 1<br>2<br>3 |
| 09. | 4.7 | கவிதை<br>ஆக்கம் | 4 | செல்வன். சி. சபேசன்<br>செல்வி. எம். எம். ஜீமானா ஹஸீன்<br>செல்வி. ம. யூஜின் சர்மிலானி | வ/தமிழ் மத்திய ம. வித்தி<br>கமு/ம.'.மூத் மகளிர் ம. வித்தி<br>யா/இளவாலை கன்னியர்மடம் ம. வி | வவுனியா<br>கல்முனை<br>யாழ் வலயம் II | 1<br>2<br>3 |
| 10. | 4.7 | " | 5 | செல்வன். ப. ஜெ. அகிலன் குரூஸ்<br>செல்வன். கி. குருபரன்<br>செல்வன். க. மோகனதாசன் | தி/புனித அந்தோனியார் ம. வி.<br>யா/யாழ் இந்துக் கல்லூரி<br>மட்/கிரான்குளம் விநாயகர் வித்தி. | திருகோணமலை<br>யாழ் வலயம் II<br>மட்டக்களப்பு | 1<br>2<br>2 |
| 11. | 4.8 | சிறுகதை<br>ஆக்கம் | 4 | செல்வி. சி. ஆரபி<br>செல்வன். கு. செந்தூரன்<br>செல்வன். காண்டீபரூபன் பிரசன்னாத் | யா/சுன்னாகம் ஸ்கந்தவரோதய க.<br>யா/யாழ் இந்துக் கல்லூரி<br>தி/கலைமகள் வித்தி. | யாழ் வலயம் II<br>யாழ் வலயம் I<br>திருகோணமலை | 1<br>2<br>2 |
| 12. | 4.8 | சிறுகதை<br>ஆக்கம் | 5 | செல்வி. சி. மாதுமை<br>செல்வி. ஏ. ஜீ. ஷெபானா<br>செல்வி. கு. குமுதினி | தி/புனித மரியாள் கல்லூரி<br>கமு/ஆயிஷா பாலிகா ம. வி.<br>யா/மெதடிஸ்த பெண்கள் உ. பா | திருகோணமலை<br>கல்முனை<br>யாழ் வலயம் II | 1<br>2<br>3 |
| 13. | 4.9 | பேச்சு | 1 | செல்வன். மா. சரண்ராஜ்<br>செல்வி. அ. ற. றக்சானா றகீம்<br>செல்வி. ச. திவ்வியா | மன்/சித்திவிநாயகர் இ. க.<br>கமு/முஸ்லிம் ம. வி. சம்மாந்துறை<br>தி/புனித மரியாள் கல்லூரி | மன்னார்<br>கல்முனை | 1<br>2<br>3 |
| 14. | 4.9 | பேச்சு | 2 | செல்வன். ச. சதுவர்தனன்<br>செல்வன். ம. வசந்தன் குரூஸ்<br>செல்வி. த. தனுஜா | மட்/புனித மிக்கேல் தே. பா.<br>மன்/பத்திமா ம. ம. வித்தி.<br>யா/வட மத்திய மகளிர் கல்லூரி | மட்டக்களப்பு<br>மன்னார்<br>யாழ் வலயம் II | 1<br>2<br>3 |
| 15. | 4.9 | பேச்சு | 3 | செல்வி. த. தேவகி<br>செல்வி. நர்மதா சந்திரகாந்தன்<br>செல்வி. ம. தர்சினி லூட்ஸ் குரூஸ் | வ/இறம்பைக்குளம் மகளிர் ம. வி.<br>தி/புனித மரியாள் கல்லூரி<br>மன்/சென்மேரிஸ் பெ. வித்தி. | வவுனியா<br>திருகோணமலை<br>மன்னார் | 1<br>2<br>3 |

கொழும்புத் தமிழ்

| தொ. இல. | விடய இல. | நிகழ்ச்சி | பிரிவு | போட்டியாளர் பெயர் | பாடசாலை | மாவட்டம்/ வலயம் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 16. | 4.0 | பேச்சு | 4 | செல்வி. க. சயிலாஜினி<br>செல்வி. மு. ச. ஹிமாயா<br>செல்வி. ஜெ. இராஜமல்லிகை | வ/தமிழ் மத்திய ம. வித்தி.<br>மட்/அல்-முனீரா ம. வித்தி<br>யா/வசாவிளான் ம. ம. வி. | வவுனியா<br>மட்டக்களப்பு<br>யாழ் வலயம்- II | 1<br>2<br>3 |
| 17. | 4.9 | பேச்சு | 5 | செல்வி. லோ. காயத்திரி<br>செல்வி. ஜீ. சி. றனித்தா<br>செல்வி. ஏ. ஜே. சப்ரினா | மட்/வின்சன்ட் மகளிர் தே. பா.<br>மன்/புனித சவேரியார் பெ. ம. ம. வி.<br>கமு/ஆயிஷா பாலிகா ம. வி | மட்டக்களப்பு<br>மன்னார்<br>கல்முனை | 1<br>2<br>3 |
| 18. | 4.10 | பாவோதல் | 1 | செல்வன். இ. மால்மருகன்<br>செல்வி. ஸ்ரீ. தாரணி<br>செல்வி. சி. துளசி | தி/இ. கி. மி ஸ்ரீ கோணேஸ்வரா இ. க.<br>யா/யாழ் இந்து மகளிர் ஆ. பா<br>யா/மானிப்பாய் சோதி-வேம்படி. வித் | திருகோணமலை<br>யாழ் வலயம் I<br>யாழ் வலயம் II | 1<br>2<br>3 |
| 19. | 4.10 | பாவோதல் | 2 | செல்வி. இ. பிரவீனா<br>செல்வி. கேர்றுட் சிந்தியா பரமநாதன்<br>செல்வி. ப. சைந்தவி | கமு/திருக்கோவில் மெ. மிதவி.<br>மட்/புனித சிசிலியா ம. வித்தி<br>யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி | கல்முனை<br>மட்டக்களப்பு<br>யாழ் வலயம் I | 2<br>1<br>3 |
| 20. | 4.10 | பாவோதல் | 3 | செல்வி. வ. துஷாறா<br>செல்வி. சி. தர்மிகா<br>செல்வி. ரா. சாயி பிரசன்னா<br>செல்வன். வினேடியஸ் தினோசன் அருட்பிரகாசம் | யா/யாழ்ப்பாணக் கல்லூரி<br>வ/இறம்பைக்குளம் மகளிர் ம. வி.<br>கமு/தம்பிலுவில் ம. ம. வி.<br>மட்/புனித மிக்கேல் கல்லூரி | யாழ் வலயம் II<br>வவுனியா<br>கல்முனை<br>மட்டக்களப்பு | 1<br>2<br>3<br>3 |
| 21. | 4.10 | பாவோதல் | 4 | செல்வன். சி. ஸ்கந்தன்<br>செல்வி. அ. ஜீவநந்தினி<br>செல்வி. நா. சுகந்தி | மட்/புனித மிக்கேல் கல்லூரி<br>மன்/முருங்கன் ம. வித்தி<br>யா/கொக்குவில் இந்துக் கல்லூரி | மட்டக்களப்பு<br>மன்னார்<br>யாழ் வலயம் I | 1<br>2<br>3 |
| 22. | 4.10 | பாவோதல் | 5 | செல்வன். இ. புலேந்திரன்<br>செல்வி. இ. கோகிலவதனி<br>செல்வி. கு. ஜமுனா | தி/சேனையூர் மத்திய கல்லூரி<br>மன்/சித்திவிநாயகர் இ. க.<br>யா/ஸ்கந்த வரோதயா கல்லூரி | திருகோணமலை<br>மன்னார்<br>யாழ் வலயம் II | 1<br>2<br>3 |
| 23. | 4.11 | இசை-தனி | 2 | செல்வன். ச. லக்மன்<br>செல்வி. பா. ஹம்சத்வதனி<br>செல்வி. இ. ஸ்வஸ்திகா | யா/மகாஜனாக் கல்லூரி<br>தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்.<br>யா/வேம்படி மகளிர் கல்லூரி | யாழ் வலயம் II<br>திருகோணமலை<br>யாழ் வலயம் I | 1<br>2<br>3 |

| தொ. இல. | விடய இல. | நிகழ்ச்சி | பிரிவு | போட்டியாளர் பெயர் | பாடசாலை | மாவட்டம்/ வலயம் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 24. | 4.11 | இசை-தனி | 3 | செல்வி. ஸ்ரீ. ஸ்ரீமகள் | யா/வேம்படி மகளிர் கல்லூரி | யாழ் வலயம் I | 1 |
| | | | | செல்வன். கி. ரமேஸ் | தி/இகிச. ஸ்ரீகோணேஸ்வரா இ. க | திருகோணமலை | 2 |
| | | | | செல்வன். த. மயூரன் | யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி | யாழ் வலயம் II | 3 |
| 25. | 4.11 | இசை-தனி | 4 | செல்வி. இ. தாரணி | யா/வேம்படி மகளிர் கல்லூரி | யாழ் வலயம் I | 1 |
| | | | | செல்வன். த. சஞ்சயன் | மட்/புனித மிக்கேல் தே. பா. | மட்டக்களப்பு | 2 |
| | | | | செல்வி. ரா. காயத்திரி | தி/ஸ்ரீசண்முகா இந்து மகளிர் க. | திருகோணமலை | 3 |
| 26. | 4.11 | இசை-தனி | 5 | செல்வன் சி. அகிலன் | யா/பரியோவான் கல்லூரி | யாழ் வலயம் - I | 1 |
| | | | | செல்வி. கே. தர்ஷினி | யா/மகாஜனாக் கல்லூரி | யாழ் வலயம் - II | 2 |
| | | | | செல்வி. எ. பிரியலோஜினி | தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி | திருகோணமலை | 3 |
| 27. | 4.12 | இசை-குழு | தி/ போ | ----- | மட்/புனித மிக்கேல் கல்லூரி | மட்டக்களப்பு | 1 |
| | | | | ----- | யா/இந்து மகளிர் கல்லூரி | யாழ் வலயம் 1 | 2 |
| | | | | ----- | தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி | திருகோணமலை | 3 |
| 28. | 4.13 | நடனம் - தனி | 1 | செல்வி பு. அமிர்தினி | தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி | திருகோணமலை | 1 |
| | | | | செல்வி. ஜீ. விவேகானந்தன் | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | யாழ் வலயம் - 1 | 2 |
| | | | | செல்வி. சி. சுகானந்தி | வ. இறம்பைக்குளம் மகளிர் ம. வி. | வவுனியா | 3 |
| | | | | செல்வி. இ. நிவேதனா | மட்/கோட்டை முனை கனிஷ்ட. வி. | மட்டக்களப்பு | 3 |
| 29. | 4.13 | நடனம்-தனி | 2 | செல்வி. இ. பிரதீபா | வ/இறம்பைக்குளம் மகளிர் ம. வி. | வவுனியா | 1 |
| | | | | செல்வி. த. பியோமி | யா/திருக்குடும்ப கன்னியர் மடம் | யாழ் - வலயம் - 1 | 2 |
| | | | | செல்வி. சி. சஜந்த ரூபிகா | தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி | திருகோணமலை | 2 |
| 30 | 4.13 | நடனம் - தனி | 3 | செல்வி. பா. நளாயினி | தி/புனித மரியாள் கல்லூரி | திருகோணமலை | 1 |
| | | | | செல்வி. ந. சோபனா | யா/இராமநாதன் கல்லூரி | யாழ் வலயம் II | 2 |
| | | | | செல்வி ச. ரகுப்பிரியா | மட்/வின்சன்ட் மகளிர் கே. பா. | மட்டக்களப்பு | 2 |
| 31 | 4.13 | நடனம் - தனி | 4 | செல்வி. அ. நித்தியா | மட்/இந்துக் கல்லூரி | | |
| மட்டக்களப்பு | | 1 | | செல்வி. செ. சுபாசினி | யா/திருக்குடும்ப கன்னியர் மடம் | யாழ் வலயம் - II | 2 |
| | | | | செல்வி. சி. கௌதமி | தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி | திருகோணமலை | 3 |

| தொ. இல. | விடய இல. | நிகழ்ச்சி | பிரிவு | போட்டியாளர் பெயர் | பாடசாலை | மாவட்டம்/ வலயம் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 32 | 4.13 | நடனம் - தனி | 5 | செல்வன். செ. ஸ்ரீ. கண்ணன்<br>செல்வி. க. சுகந்தி<br>செல்வி. ப. கம்சாயினி | யா/பெரியபுலம் ம. வித்தியாலயம்<br>தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி<br>வ. தமிழ் மத்திய மகா வித்தி. | யாழ் வலயம் I<br>திருகோணமலை<br>வவுனியா | 1<br>2<br>3 |
| 33 | 4.14 | நடனம் குழு | தி/ போ | --------<br>--------<br>------- | தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி<br>யா/இராமநாதன் கல்லூரி.<br>வ. இறம்பைக்குளம் மத்திய. ம. வி. | திருகோணமலை<br>யாழ் வலயம் II<br>வவுனியா | 1<br>2<br>3 |
| 34 | 4.15 | நாட்டிய நாடகம் (ஆடற்கலை) | தி/ போ | -------<br>-------<br>------- | யா/இராமநாதன் கல்லூரி<br>தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்.<br>யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி. | யாழ் வலயம் II<br>திருக்கோணமலை<br>யாழ் வலயம் I | 1<br>2<br>3 |
| 35 | 4.16 | இலக்கிய நாடகம் | தி/ போ | -------<br>-------<br>........<br>........ | தி/புனித சூசையப்பர் கல்லூரி<br>வ/சைவப்பிரகாச ம. வித்தி<br>யா/மானிப்பாய் மெமோறியல் ஆ. பா<br>மட்/வின்சன்ட் தேசிய பாடசாலை | திருகோணமலை<br>வவுனியா<br>யாழ் வலயம் II<br>மட்டக்களப்பு | 1<br>2<br>3<br>3 |
| 36 | 4.17 | வில்லுப்பாட்டு | தி/ போ. | .........<br>......... | தி/புனித அந்தோனியார் ம. வி<br>மன்/பாத்திமா ம. ம. வி.<br>யா/யாழ்ப்பாணக் கல்லூரி | திருகோணமலை<br>மன்னார்<br>யாழ் வலயம் II | 1<br>2<br>3 |
| 37. | 4.18 | விவாதம் | தி/ போ. | .........<br>.........<br>......... | யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி<br>யா/யாழ் இந்துக் கல்லூரி<br>மட/வாழைச்சேனை அந்நூர் | யாழ் வலயம் I<br>யாழ் வலயம் I<br>மட்டக்களப்பு | 1<br>2<br>2 |
| 38. | 4.19 | தமிழ் அறிவு வினா. விடைப் போட்டி. | தி/ போ. | .........<br>.........<br>......... | யா/ஞானசாரியார் கல்லூரி<br>வ/தமிழ் மத்திய ம. வித்தி.<br>தி/நிலாவெளி தமிழ் ம. வித்தி | யாழ் வலயம் II<br>வவுனியா<br>திருகோணமல்ல | 1<br>2<br>3 |
| 39. | 4.20 | நாட்டார் பாடல் - குழு | தி/ போ. | ..........<br>..........<br>.......... | வ/இறம்பைக்குளம் மகளிர் ம. வி<br>மட்/கல்லடி விவேகானந்தா ம. வி<br>தி/இகிமி ஸ்ரீகோணேஸ்வரா இ. க. | வவுனியா<br>மட்டக்களப்பு<br>திருகோணமலை | 1<br>2<br>3 |

| தொ. இல. | விடய இல. | நிகழ்ச்சி | பிரிவு | போட்டியாளர் பெயர் | பாடசாலை | மாவட்டம்/ வலயம் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 40 | 4.21 | முஸ்லிம் நிகழ்ச்சி (முஸ்லிம் மாணவர்களுக்கு | தி/ போ. | செல்வன். எச். எஸ் இல்ஹாம்<br>செல்வி. கா. மு. மு. பஹீமா<br>செல்வி. நஜீர் அல்-மிசிறியா | மன்/அல்-அஸ்ஹார் ம. வித்தி<br>மட்/அந்-நாஸர் வி. காத்தான்குடி<br>தி/புனித பிரான்சிஸ் சவேரியார் ம. வி. | மன்னார்<br>மட்டக்களப்பு<br>திருகோணமலை | 1<br>2<br>3 |
| 41. | 4.22 | தமிழ் வாசிப்பு (சிங்கள மாண வர்களுக்கு) | விசேட பிரிவு | செல்வி. மாலிகா காயத்திரி பெர்ணாந்து<br>செல்வி. அசங்கா சியாமலி ஐ | தி/திஸ்ஸ ம. வித்தி<br>வ/பரக்கும் ம. வித்தி. | திருகோணமலை<br>வவுனியா | 1<br>2 |
| 42. | 4.23 | தமிழ் உறுப் பெழுத்து (சிங்கள மாணவர்) | வி/ பிரிவு | செல்வி. அசங்கா சியாமலி. ஐ<br>செல்வி. எச் டபிள்யூ சாந்தினி | வ/பரக்கும் ம. வித்தி<br>தி/ஜயபுர வித்தி. தம்பலகமம் | வவுனியா<br>திருகோணமலை | 1<br>2 |
| 43. | 4.24 | நாட்டுக் கூத்து (வடமோடி) | தி/ போ. | .....<br>..... | மட்/கல்லடி விவேகானந்தா ம. வி.<br>தி/இலங்கைத்துறை முகத்துவாரம் த.க<br>மன்/நானாட்டான் ம. வித்தி. | மட்டக்களப்பு<br>திருகோணமலை<br>மன்னார் | 1<br>2<br>3 |
| 44. | 4.24 | நாட்டுக் கூத்து (தென்மோடி) | தி/ போ. | ......<br>...... | மட்/மகிழடித்தீவு சரஸ்வதி வித்தி.<br>யா/புனித றோக் றோ. க. வித்தி.<br>யா/ஆனைக்கோட்டை றோ. க. பா. | மட்டக்களப்பு<br>யாழ் வலயம் I<br>யாழ் வலயம் II | 1<br>2<br>3 |

**திகதி: 1997-06-23**

**திரு. க. கந்தசாமி**
மாகாண கல்விப்பணிப்பாளர்,
மாகாண கல்வித்திணைக்களம்,
வடக்கு கிழக்கு மாகாணம்,
திருகோணமலை

# வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ்மொழித்தின விழாக்குழுச் செயலாளரின்

# செய்தியும் நன்றிநவிலலும்

வடக்கு கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம் நடாத்தும் தமிழ்மொழித்தின விழா இவ்வாண்டும் 1998. ஜுன் 19ம், 20ம், திகதிகளில் திருகோணமலை நகரில் விழாக்கோலம் கொள்வது குறிப்பிடத்தக்கது.

தமிழ்மொழித்தினப் போட்டிகள் யாவும் சிறப்புற நடைபெறவும் நிறைவுறவும், இறுதிநாள் விழா சிறப்புற அமையவும் எமக்குப் பக்கபலமாய் நின்று வழிகாட்டிய மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. கந்தசாமி அவர்களுக்கு குழுச் செயலாளர் என்ற ரீதியில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்விழா மெருகுற அமைவதற்கு ஒத்தாசை நல்கிய மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. ரி. பி. ட. ஆரியசேன அவர்களுக்கும் அவரது அலுவலர்களுக்கும் எனது நன்றிகள் உரியதாகுக.

தமிழ்த்தினப் போட்டிகள் சகல மட்டங்களிலும் சிறப்புற நடைபெறவும் உரிய காலத்தில் திட்டமிட்டபடி விழா நடைபெறவும் அயராது உழைத்த சகல விழாக்குழு உறுப்பினர்களுக்கும் தராசுக்கோல் அமைந்து எமது மாணவசெல்வங்களின் தரங்களை அளவிட்டுத் தந்துதவிய நடுவர்களுக்கும் எனது நன்றிகள்.

மத்தியஸ்தம் வகிக்கவும் போட்டிகளிற் பங்குகொள்ளவும், மாணவர்களின் பாதுகாப்புக் கருதியும் வருகைதந்த வெளிமாவட்டத்தைச் சேர்ந்த அனைவரையும் இன்முகம் கொண்டு வரவேற்று தங்குமிட வசதி ஏற்படுத்திக் கொடுத்து உணவு வசதிகளையும் ஏற்படுத்தித் தந்த பாடசாலை அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள்

விழாவின் மலருக்கு ஆசியுரை வழங்கிச் சிறப்பித்த வட-கிழக்கு மாகாணக் கௌரவ ஆளுனர் கலாநிதி காமினி பொன்சேகா அவர்களுக்கும் வட-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும், வட-கிழக்கு மாகாண கல்வி, விளையாட்டு பண்பாட்டுத்துறைச் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன். அத்தோடு நிறைவு நாள் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த திரு. சுந்தரம் டிவகலாலா அவர்களுக்கு எனது நன்றிகள்.

விழா சிறப்புற அமைவதற்கு மண்டப வசதியினை செய்து உதவிய கல்லூரி அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும் நன்றிகள்.

இம்மலர் நூல் உருவம் பெற உதவிய மலர் வெளியீட்டுக்குழுவினருக்கும், இதை அழகுற அச்சிட உதவிய ஸ்ரீ கணேச அச்சகத்தினருக்கும் எனது நன்றிகள் தமிழ்த்தினப் போட்டிகளுக்கு மாணவருக்குப் பயிற்சியளித்து அவர்களின் ஆற்றல் களை வெளிக்கொணர்வதற்கு உதவிய ஆசிரியர்களுக்கும் கலைஞர்களுக்கும் மனமுவந்து போட்டிகளிற் கலந்துகொண்ட மாணவர்களுக்கும் எனது நன்றி.

**எஸ். மகாலிங்கம்**
**விழாக்குழு** செயலாளர்
மேலதிக கல்விப் பணிப்பாளர்.

# தமிழ் மொழி வாழ்த்து

தான தனத்தன தானதனத்தான தான தனத்தான

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ் மொழி! வாழ்க தமிழ் மொழி!
வாழ்க தமிழ் மொழியே!

வானம் அளந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

தி/ஸ்ரீ கணேச அச்சகம் ☎ 026 - 22617